மலர்-3 இதழ்-61 மார்ச் 1-15 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மெயில் புக்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மாதமிருமுறை

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# மகா சிவராத்திரியும் நான்கு கால பூஜையும்

# குலதெய்வமான காமாட்சி விளக்கு

உலக மக்களின் நன்மைக்காகவும், தன்னுடைய பிள்ளைகளின் நலனுக்காக தவம் இருந்தவள் காமாட்சியம்மன். அவர் அப்படி தவம் இருந்த போது, சகல தெய்வங்களும் காமாட்சி அம்மனுக்குள் அடங்கியது.

அதனால் காமாட்சி அம்மனை வழிபட்டாலோ அனைத்து தெய்வங்களையும் வழிபட்ட பலன் ஒருவருக்கு கிடைத்துவிடும் என்பது நம்பிக்கை.

தங்களுடைய குலதெய்வங்களை நினைத்துக் கொண்டு காமாட்சி விளக்கை ஏற்றி வணங்கும் போது காமாட்சி அம்மனுடைய அருளும் அவரவர் குலதெய்வத்தின் ஆசியும் கிடைக்கும்.

தங்களுடைய குலதெய்வம் எது என தெரியாமல் தவிப்பவர்கள் காமாட்சி அம்மனையே தங்கள் குலதெய்வமாக நினைத்துக் கொண்டு, ‘நீயே என் குல தெய்வமாய் இருந்து என் குலத்தை தழைக்க காப்பாற்று’ என வணங்கியபடி விளக்கேற்றி வழிபடலாம். அதற்கு ‘காமாட்சி தீபம்’ என்று பெயர்.

காமாட்சி அம்மனுக்குள் அனைத்து தெய்வங்களும் அடக்கம் என்பதால் அனைத்து தெய்வங்களின் அருளையும் பெற வேண்டி திருமணங்களில் மணமக்கள் கையில் காமாட்சி விளக்கை ஏந்திக்கொண்டு வலம் வரவும் புகுந்த வீட்டிற்குச் செல்லும் மணப்பெண் அங்கு முதன் முதலில் காமாட்சி விளக்கை ஏற்றுவதற்கும் சொல்கிறார்கள்.

அதோடு காமாட்சி விளக்கினை ஏற்றுவதால் குலதெய்வத்தின் ஆசியுடன் அவர்களின் குலம் தழைத்து வளரும் என்பதும் நம்பிக்கை.

கஜலட்சுமியின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும் காமாட்சி விளக்கு மங்கலப் பொருட்களில் ஒன்று என்பதால் பூவும் பொட்டும் வைத்து மங்கலத்துடன் தீபம் ஏற்றி தினமும் வழிபட்டு வரும் இல்லத்தில் வறுமை என்பதே இருக்காது.

சில குடும்பங்களில் பரம்பரை பரம்பரையாக காமாட்சியம்மன் விளக்குகளை பாதுகாப்பாக வைத்திருப்பதும் உண்டு.

திருமண சீர்வரிசைகளில் மணப்பெண்ணுக்கு காமாட்சி அம்மன் விளக்கும் இரண்டு குத்து விளக்குகளும் அவசியம் வழங்குவது இன்றும் நடைமுறையில் உள்ளது. நம்முடைய இல்லத்திலும், உள்ளத்திலும் உள்ள எல்லா இருள்களையும் நீக்கி இறைவனின் அருள் ஒளியை அருளும் காமாட்சி அம்மன் விளக்கு நமக்கு அனைத்து செல்வங்களையும் கொடுக்கட்டும்.







## தர்மசிந்தனை உள்ளவனாக இரு

தான தர்மங்களில் பொருளைச் செலவு செய்ய வேண்டும். ஆனால் எதிலும் மிதமிஞ்சி செலவு செய்யகூடாது. உடல் அழியக்கூடியதே. ஆயினும்,அது உள்ளவரை செல்வமும் ஒரு அளவுக்கு தேவையே. செல்வமே எல்லாம் என்று எண்ணி அதன் வசப்பட்டு லோபியாக மாறிவிடாதே. தாராளமாகவும், தர்ம சிந்தனை உள்ளவனாகவும் இரு. ஆனால் மிதமிஞ்சியும், பகட்டாகவும் செலவு செய்யாதே.

## மகிழ்ச்சியின் பாதை

பொறு, உன்னுடையகவலை களைத் தூர எறி, உன்னு டைய துன்பங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டன. ஒருவன் எவ்வளவு தான் நசுக்கப்பட்டு வேதனைப் பட்டவனாக இருப்பினும், ஷீரடியில் கால் வைத்தவுடனே அவன் மகிழ்ச்சியின் பாதையில் செல்கிறான்.



## திருநீறு குங்குமப் பலன்கள்

திருநீற்றினை நெற்றியில் இட்டுக்கொண்டு இரு புருவ மத்தியில் அம்பாளுக்கு உகந்த குங்குமம் வைத்துக் கொள்ளலாம். இதனால் கிடைக்கும் நன்மைகள்:

1. சிவனருள்

2. மன அமைதி

3. நெற்றியின் புருவ மத்தியை வைத்து தான் ஹிப்டானிசம் செய்வதாக சொல்லப்படுகிறது. தீருநீறு, குங்குமம் வைக்கும் போது இந்த ஹிப்டானிசம் செய்வினைகள் எல்லாம் தவிர்க்கப்படுகிறது.

4. திருநீறு நம் நெற்றியில் தேவையற்ற நீர் உறிஞ்சும் சக்தி உடையது

5. நாம் திருநீறு இட்டு வெளியே செல்லுதல் கண் திருஷ்டியில் இருந்து விலக்கு.



## மூன்று கோடு

1. கிழக்கு, வடக்கு திசைகளில் நின்றாவாறே திருநீறு இட வேண்டும்.

2. சிவ நாமங்களான “சிவ சிவ” “ஓம் நமச்சிவாய”

“ஓம் சிவாய நம” என்று உச்சரித்தல் நல்லது. உங்கள் இஷ்ட தெய்வங்களை நினைத்து இடுவதும் நல்லதே.

3. திருநீறு என்றால் ஐஸ்வர்யம் என்பது பொருள். அப்படியெனில் ஐஸ்வர்யம் நம்முடனிருக்க திருநீறு இடுவோம்..

திருநீறை நெற்றியின் இடக் கண் புருவ ஆரம்பத்தில் இருந்து வலது கண் புருவ இறுதி வரை மூன்று கோடுகளாக இடுதல் வேண்டும். மூன்று கோடுகள் எதற்கு? இந்த மூன்று கோடுகள் ஈசனின் தொழிலான 1.ஆக்கல் 2.காத்தல் 3.அழித்தல் என்பதை குறிக்கிறது.

# அற்புதமான பலன்கள் தரும்



# ருத்ராட்சம்

## எந்த கட்டுப்பாடும் கிடையாது அனைவரும் அணியலாம்

அவன் அருளாலே தான் அவனை வணங்க கூட முடியும். அவன் அருள் இருந்தால் தான் அவன் சொத்தான ருத்ராட்சத்தை கூட அணிய முடியும்...

ருத்ராட்சம் அணிவது பற்றி ஸ்ரீமத் தேவி பாகவதம், சிவமஹா புராணம், மிக பழமையான சிவாகமங்களில் சொல்லப்பட்ட ரகசியம்...

எவ்வித மந்திரங்களை உச்சரிக்காதவனும், எவ்வித யாகங்களைச் செய்யாதவனும் கூட ருத்ராட்ச மணிகளை வெறுமனே தொடுவதன்மூலம் தன் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுபட்டு மறுபிறவியில் ருத்ரனாகவே அவதரிக்கிறான்.

ருத்ராட்சத்தை அணிபவனும், வழிபடுபவனும் சம்சார பந்தங்களிலிருந்து விடுபட்டு, தொடரவிருக்கும் அனேக கோடி பிறப்புகளிலிருந்தும் விடுபடுகிறான்.

ருத்ராட்சம்அணிந்த ஒருவனுக்கு உணவும், உடையும் தருபவனும், ருத்ராட்சம் அணிந்த சிவனடியார்களின் பாதங்களைக் கழுவிய நீரை தீர்த்தமாக ஏற்றுக்கொள்பவனும் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபட்டு, சிவலோகத்தை அடைகிறான்.

நம்பிக்கையோடும், நம்பிக்கையில்லாமலும் ருத்ராட்சத்தை அணிந்துகொள்பவன் ருத்ர அம்சத்தைப் பெறுகிறான்.

ருத்ராட்சத்தின் மகிமையை என்னாலும் விளக்கிக் கூற முடியாது என்று சிவபெருமான் தேவிக்கு உரைத்ததாக ஸ்ரீமத் தேவிபாகவதம் கூறுகிறது.





அனைத்துவித ஸ்தோத்திரங்களை உச்சரிப்பதன் மூலமும், விரதங்களை அனுசரிப்பதன் மூலமும் அடைகின்ற பலனை, ஒருவன் ருத்ராட்சத்தை அணிந்து கொள்வதன் மூலம் பெறுவான்.

ருத்ராட்ச மாலையை அணிந்தவருக்கு ஒருவன் உணவு அளிப்பானாகில், அவனது 21 தலைமுறை மக்களும் பாவங்களிலிருந்து விடுபட்டு ருத்ரலோகத்தை அடைவார்கள்.

சண்டாளனாகப் பிறந்தவனும், ருத்ராட்சத்தோடு தொடர்பு கொள்வானாயின் அவனது பாவங்கள் அவனை விட்டு விலகி ஓடிவிடும்.

கள் உண்பவனும், மாமிசம் உண்பவனுமாகிய பாவியின் தலையில் ருத்ராட்சம் படுமேயானால் அவனது பாவங்கள் அனைத்தும் விலகும்.

ருத்ராட்சமாலையை ஒருவன் வெறுமனே கையில் பிடித்திருந்தாலும், நான்கு வேதங்களையும், சாஸ்திரங்களையும், உபநிடதங்களையும் கற்றறிந்தவனைவிட சிறப்பு பெறுவான்.

அனைத்துக் கல்வி வேள்விகளும் அவன் வசமாகின்றன. பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடிய பலனைவிட அதிக பலனைப் பெறுகிறான்.

ஒருவன் மரணம் அடையும் தருவாயில் ருத்ராட்சத்தை தரித்துக் கொண்டிருப்பானாகில், அவன் இறந்தபின் ருத்ர லோகத்தை அடைகிறான்.

பிறப்பால் ஒருவன் பிராமணனோ அல்லது சண்டாளனோ அல்லது மிலேச்சனோ; உண்ணக்கூடாததை உண்பவனோ யாராகிலும்அவன் ருத்ராட்சத்தை அணிவானாகில் அவன் ருத்ரனுக்கு இணையாகிறான்.

- ருத்ராட்சத்தைத் தலையில் தரிப்பவன் கோடி புண்ணியங்களைப் பெறுவான்.
- காதுகளில் அணிபவன் பத்துகோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;
- கழுத்தில் அணிபவன் நூறுகோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;
- பூணூலில் அணிபவன் ஆயிரம் கோடிப் புண்ணியங்களைப் பெறுகிறான்;
- கைகளில் அணிபவன் லட்சம் கோடிப் புண்ணியத்தைப் பெறுகிறான்;
- இடுப்பில் அணிபவன் மோட்சத்தை அடைகிறான்.

ருத்ராட்சத்தை அணிந்தவாறு, வேத நியமங்களை ஒருவன் கடைபிடிப்பானாகில் அவன் பெறும் பலன்களை அளவிட முடியாது.

கழுத்தில் ருத்ராட்ச மாலையை அணிந்தவன் இந்த உலகத்தளைகளிலிருந்து விடுபடுகிறான்.

ருத்ராட்சத்தை உடலில் அணியாவிட்டாலும், அதைப் பூஜிப்பவனும் கூட சிவலோகம் சென்றடைந்து சிவனைப் போலவே வணங்கப்படுகிறான்.

ருத்ராட்சம் அணிந்தவன் சிவபெருமானைப் போலவே முப்பத்துமுக்கோடி தேவர்களாலும் வணங்கப்படுகிறான்.

ருத்ராட்சத்தைத் தலையில் தரித்து ஒருவன் நீராடுவான் எனில், ருத்ராட்சத்தைத் தொட்ட நீர் அவன் உடலைத் தீண்டுமாயின், அது

> **ருத்ராட்சமாலையை ஒருவன் வெறுமனே கையில் பிடித்திருந்தாலும், நான்கு வேதங்களையும், சாஸ்திரங்களையும், உபநிட தங்களையும் கற்றறிந்தவனைவிட சிறப்பு பெறுவான். அனைத்துக் கல்வி வேள்விகளும் அவன் வசமாகின்றன. படிக்கும் குழந்தைகள் படிப்பில் சிறந்து விளங்க ருத்ராட்சத்தை அவசியம் அணிவியுங்கள்.**

கங்கையில் நீராடியதைவிட அதிகப்புண்ணியப் பலன்களைத் தரும்.

மனிதன் மட்டுமல்ல; ஓரறிவுள்ள பிராணிகள் முதல் ஐந்தறிவுள்ள உயிர்கள் வரை ருத்ராட்சத்தோடு சம்பந்தம் பெற்றால், அவை அனைத்தும் மறுபிறவியில் சிவலோகத்தை அடைந்தே தீரும்.

பல்வேறு யுகங்களில் நாயும், கழுதை யும், கோழியும், ருத்ராட்சத்தோடு தொடர்பு பெற்றதால் அவை சிவலோகம் சென்றடைந்தன. மறு ஜன்மத்தில் சிறந்த சிவ பக்தர்களாகப் பிறந்தன.

இந்த கலியுகத்தில், ருத்ராட்சத்தை அணிவதற்கு மிகுந்த மனவலிமை தேவைப்படுகிறது.

ருத்ராட்சம் அணிவதை கிண்டல் செய்யவும், தேவையில்லாமல் மிரட்டவுமே நம்மைச் சுற்றியுள்ளவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

ஆனால், பல நூறுபிறவிகளில் பல கோடி புண்ணியம் செய்தால் மட்டுமே இந்த பிறவியில் ருத்ராட்சம் அணியும் பாக்கியம் நமக்குக் கிட்டும்.

பெண்கள் மாத விலக்கு நாட்களிலும் ருத்ராட்சம் அணிந்திருக்கலாம்.

தாம்பத்தியம் இதற்குத் தடை அல்ல.

ருத்ராட்சத்தை தானம் செய்பவர்களுக்கு, அடுத்தவர்களுக்கு அணிய வைப்பவனுக்கு இன்னோரு பிறவி இந்த பூமியில் இனி கிடையாது.

மேற்கண்டவை அனைத்தும் சிவமஹா புராணத்தில் கூறப்பட்டுள்ளது.



## அன்னை ஆளும் மதுரையின் சிறப்புகள்

சீறா நாகம், கறவா பசு, பிளிறா யானை, முட்டா காளை, ஓடா மான், வாடா மலை, காயா பாறை, பாடா குயில், இவை அனைத்தும் மதுரை நகரின் அந்தக் காலத்து எட்டு திசைகளைக் குறிக்கும் எல்லை ஊர்கள்.

சீறா நாகம்..........நாகமலை
கறவா பசு..........பசுமலை
பிளிறா யானை..........யானைமலை
முட்டா காளை..........திருப்பாலை
ஓடா மான்..........சிலைமான்
வாடா மலை..........அழகர்மலை
காயா பாறை..........வாடிப்பட்டி
பாடா குயில்..........குயில்குடி.

❖ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சுவாமி சந்நதி செல்லும் வழியில் ஒரு தூணியில் 'விநாயக தாரணி' எனப்படும் பெண்வடிவ விநாயகியை பார்க்கலாம். இவருக்கு 'சந்தனக்காப்பு' அலங்காரம் செய்து வணங்கினால் பெண்களுக்கு திருமண தோஷம் விலகும்.

❖ மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அருகே உள்ள கீழ ஆவணிமூல வீதி பைரவர் கோயிலுள்ள 'சோம சூரிய கணபதி'யை அமாவாசை நாளில் வேண்டிக்கொள்ள கிரக, நாக தோஷம் விலகும்.


திருவாப்புடையார் கோயில்


சிம்மக்கல் பழைய சொக்கநாதர் கோயில்


இம்மையில் நன்மை தருவார் கோயில்

# மதுரையில் உள்ள பஞ்சபூத தலம்

சிவபெருமான் பஞ்ச பூதங்களுககு அதிபதியாக உள்ளதால் தமிழகத்தில் பஞ்ச பூத தலங்கள் சிறப்பு பெற்று விளங்குகிறது. இதில் ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொரு சிறப்பம்சம் உள்ளது. இதைப்போன்று மதுரை மாட்டத்தில் கூட பஞ்ச பூதங்களுக்கென்று தனித்தனி கோவில்கள் உள்ளன. இந்த தலங்களை தரிசித்தால் ஒரே நேரத்தில் தமிழகத்தில் உள்ள பஞ்ச பூத தலங்களை தரிசித்த பலன் கிடைக்கும்.

அவை:

1. மதுரை செல்லூரில் உள்ள திருவாப்புடையார் கோயில் 'நீர் ஸ்தலம்',
2. சிம்மக்கல் பழைய சொக்கநாதர் கோயில் 'ஆகாய ஸ்தலம்',
3. இம்மையில் நன்மை தருவார் கோயில் 'நில ஸ்தலம்',
4. தெற்கு மாசி வீதி தென் திருவாலவாயர் கோயில் 'நெருப்பு ஸ்தலம்',
5. தெப்பக்குளம் முக்தீஸ்வரர் கோயில் 'காற்று ஸ்தலம்' ஆகியவை மதுரையின் பஞ்சபூத ஸ்தலங்கள்

அதனால் தான் பஞ்சபூதங்களை உள்ளடக்கி வெள்ளை, ஊதா, பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறங்கள் கலந்த பஞ்சவர்ண கிளியை அன்னை மீனாட்சி கையில் பிடித்துள்ளாள் .

அப்பன் சிவனும் 64 திருவிளையாடல்களையும் கடம்பவனமாம் மதுரையிலேயே நிகழ்த்தி உள்ளார்.

திருவாரூரில் பிறந்தால் புண்ணியம்,
காஞ்சியில் வாழ்ந்தால் புண்ணியம்,
காசியில் இறந்தால் புண்ணியம்,
சிதம்பரத்தில் வழிபட்டால் புண்ணியம்,
திருவண்ணாமலையை
நினைத்தாலே புண்ணியம்.

இதைப்போன்றுதான் மதுரையையும் பஞ்ச பூத தலத்துடன்ஒப்பிட்டு,
மதுரையில் பிறந்தாலும்
மதுரையில் வாழ்ந்தாலும்
மதுரையில் இறந்தாலும்
மதுரையில் வழிபட்டாலும்
மதுரையை நினைத்தாலும் புண்ணியம் என்று முன்னோர்கள் வரையறுத்து கூறுகின்றனர்.


தென் திருவாலவாயர் கோயில்


தெப்பக்குளம் முக்தீஸ்வரர் கோயில்

# நம்பி வந்த பெண்ணைக் காக்க 36 தம்பதியினர் உயிர் தியாகம் செய்த கோயில்

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேயர்கள் ஆட்சிக்காலத்தில் மதுரை சுற்றுப் பகுதிகளில் குறுநில மன்னர்களாக ஆட்சி புரிந்து வந்த சாப்டூர் ஜமீன் ஆளுகைக்கு உட்பட்ட பகுதியில் பல்வேறு வரலாற்று சிறப்பு மிக்க சம்பவங்கள் இடம்பிடித்துள்ளது. அப்போது ஆண்ட வெள்ளைக்காரர்கள், மக்களை தங்கள் அடிமையாக வைத்துக்கொண்டு, அவர்கள் மூலம் தங்களது வியாபாரத்தையும், பல்வேறு சுரண்டல்களையும் நிகழ்த்துவதற்கு, தங்களின் அப்போதைய புதிய தொழில்நுட்பத்தை பயன் படுத்தி, சிறு, குறுநில மன்னர்கள், ஜமின்தார் போன்றவர்களுக்கு சாதகமாக செயல்பட்டு, அவர்களை தங்கள் கைப்பாவையாக மாற்றி வைத்திருந்தனர்.

பெயருக்கு ஜமீன்தார்களின் நிர்வாகம் இருந்து வந்துள்ளது. ஆனால் அதிகாரம் செய் வது கட்டளையிடுவது அனைத்தும் ஆங்கிலேய அரசு, இந்த சூழ்நிலையில், பருவமடையும் கன்னிப் பெண்களை சேவகம் செய்வதற்காக ஜமீன்தார்களிடம் ஒப்படைப்பது வழக்கமாக இருந்து வந்தது.




இந்த விஷயத்தில் யாருக்கும் விதிவிலக்கு இல்லாத நிலையில், ஏழை ஒருவரின் மகள் பருவமடைந்த தகவல் ஜமீன்தாருக்கு சென்றுள் ளது.

இதையடுத்து அவரது உத்தரவின் பேரில் அரண்மனை காவலர்கள் அந்த ஏழையின் மகளை அழைத்துவரச் சென்றுள்ளனர். அப்போது தான் சீராட்டி வளர்த்த மகளை அரமண்மனைக்கு அனுப்பிட மனமில்லாததால் அந்த ஏழை தனது மகள் மற்றும் குடும்பத்தினருடன் ஜமீனை விட்டு வெளியேறி ஒவ்வொரு கிராமம் கிராமமாக தஞ்சம் கேட்டு கால்நடையாக சென்றுள்ளார்.

ஆனால் ஜமீனுக்கு பயந்து யாரும் அடைக் கலம் தரவில்லை, ஜமீன்தாரின் கோபத்திற்கு ஆளாகிட வேண்டாம் என்ற எண்ணத்தில் அவர்களுக்கு அடைக்கலம் கொடுக்க பல கிராம மக்கள் மறுத்துள்ளனர். இதனால் மன முடைந்த அந்த ஏழை தனது மனம் போன போக்கில் நடந்து சென்று, கடைசியாக மதுரை திருமங்கலம் அருகேயுள்ள கட்ராம்பட்டி எனும் கிராமத்தில் தஞ்சம் கேட்டுள்ளார்.

அன்றைய காலகட்டத்தில் கட்ராம்பட்டி கிராமம் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு சொந்தமான 48 கிராமங்களின் தாய் கிராமமாக திகழ்ந்து வந்துள்ளது. இந்த கிராமத்தில் வசித்தவர்கள் அனைவரும் வீரர்களும் புஜபல பராக்கிரமம் கொண்டவர்களுமாக இருந்துள் ளனர்.

மேலும் இந்த சமுதாயத்திற்கு சொந்தமான 48 கிராமங்களைச் சேர்ந்தவர்களும் திருமணம் முடிக்க வேண்டுமென்றால் தங்களது தாய் கிராமமான கட்ராம்பட்டியில் வந்து திருமணம் செய்வதை வழக்கமாக கொண்டிருந்தனராம்.

இத்தகைய சிறப்பு மிக்க கட்ராம்பட்டி கிராமத்திற்கு வந்து சேர்ந்த அந்த ஏழை மற்றும் அவரது குடும்பத்திற்கு கிராம மக்கள் அனைவரும் ஒன்றுகூடி ஆதரவு தெரிவித்து அடைக்கலம் கொடுத்துள்ளனர்.

மேலும் தங்களது உயிரே போனாலும் பரவா யில்லை கட்ராம்பட்டியை நம்பி வந்த அந்த கன்னிப்பெண் மற்றும் அவரது குடும்பத்தினரை காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றுவது என்றும் சபதம் செய்துள்ளனர்.

இதனிடையே தனது அரண்மனை சேவகத் திற்கு வராமல் தப்பியோடி தலைமறைவாகி விட்ட அந்த கன்னிப்பெண் மதுரை காட்ராம்பட்டியில் இருப்பதை அறிந்து ஜமீன்தாரர் 100க்கும் மேற்பட்ட வீரர்களை அனுப்பி அந்த கன்னிப் பெண்ணை பிடித்து வர கட்டளையிட்டான்.

கடைசியாக கட்ராம்பட்டி கிராமத்திற்கு வந்து வீரர்கள் விசாரித்தபோது யாரும் அந்த கன்னிப் பெண்ணை காட்டிக் கொடுக்காமல் ஒற்றுமையாக இருந்து விட்டனர். அந்த சமயத் தில் தாய் கிராமமான கட்ராம்பட்டி கிராமத்தின் வடமேற்கு பகுதியில் மரங்கள் அடர்ந்த இடத்தில் பல்வேறு கிராமங்களில் இருந்து வந் திருந்த 36 ஜோடிகளுக்கு திருமண வைபம் நடைபெற்றுள்ளது.

இதனை பார்த்த ஜமீன்தாரின் வீரர்கள் அந்த இடத்திற்கு சென்று கன்னிப்பெண்ணை குறித்து விசாரித்துள்ளனர். அங்கிருந்தவர்களும் புதுமணத் தம்பதியரும் தங்களுக்கு ஏதும் தெரி யாது என்று கூறிவிட்ட நிலையில் ஜமீன்தாரின் வீரர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

வேற்று கிராமத்தைச் சேர்ந்த ஒருசிலர், வீரர்கள் தேடிவந்த பெண் காட்ராம்பட்டியில்தான் இருக்கிறாள் என்று ஜமீன் வீரர்களிடம் கூறிவிட.

ஜமீன் வீரர்கள் அனைவரும் கன்னிப்பெண் னை தேடி அலைந்து திரிந்தனர், ஆனால் அந்த கன்னிப் பெண் கிடைக்காத ஆவேசத்தில் கட்ராம்பட்டியில் அன்றையதினம் 36 ஜோடி களுக்கு திருமணம் செய்த இடத்திற்கு வந்து மணமகன்களை நிறுத்திவைத்து தஞ்சமடைந்த கன்னிப்பெண் குறித்து கேட்டு மிரட்டியுள்ளனர்.

அப்போது புதுமாப்பிள்ளைகளாக மணக் கோலத்தில் இருந்தவர்கள் கன்னிப்பெண் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது, அப்படி ஏதேனும் தெரிந்தாலும் தாய் கிராமத் தின் நியமப்படி உயிரே போனாலும் எதுவும் கூற மாட்டோம் என்று ஆணித்தரமாக கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த ஜமீன்தாரின் படைகள் அன்றையதினம் ஆட்சி செய்துவந்து ஆங்கிலேயரின் சிறப்பு உத்தரவை பெற்று தஞ் சமென வந்த கன்னிப்பெண்ணை காட்டிக் கொடுக்க மறுத்த 36 புதுமாப்பிள்ளைகளையும் வாளால் வெட்டியும் துப்பாக்கியால் சுட்டும் கொலை செய்துள்ளனர்.

அப்போது மக்கள் வெள்ளமென திரண்டு


ஆன்மிகமலர் மெயில் புக்

வந்து ஜமீன்வீரர்களுடன் போராடியபோது அவர்கள் கட்ராம்பட்டி கிராமத்திலிருந்து பின்வாங்கிச் சென்றுவிட்டனர்.

ஊரே சோகத்தில் ஆழ்ந்திருந்த சமயம், அன்றைய தினம் கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறிட வேண்டும் என்ற கட்டாயம் இருந்த நிலையில் ஜமீன்வீரர்களால் படுகொலை செய்யப்பட்டு வீரமரணமடைந்த தங்களது கணவர்களது சிதையில் எரிந்து கொண்டிருந்த தீயில் குதித்து 36 புதுமணப் பெண்களும் உடன்கட்டை ஏறி வீரச்சாவு அடைந்துள்ளனர். இதனால் அந்த கன்னிப்பெண் ஜமீன் சேவகத்திற்கு செல்லாமல் கட்ராம்பட்டி கிராம மக்களால் குடும்பத்துடன் காப்பாற்றப்பட்டாள்.

மொத்தத்தில் தாய் கிராமமான கட்ராம்பட்டி கிராமத்தில் தஞ்சமென வந்த கன்னிப்பெண்ணை காட்டிக் கொடுக்க மறுத்து ஜமீன்தாரின் படைவீரர்களின் தாக்குதலுக்கு இலக்காகி 36ஜோடிகள் வீரமணடைந்த இடம் தற்போது 72 தாத்தகாரு வீரக்கோவிலாக உள்ளது.

இன்றைக்கும் கட்ராம்பட்டி மற்றும் சுற்றுப்புற



கிராமத்தில் வசித்திடும் அந்த குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தங்களது வீடுகளில் நடைபெறுகின்ற சுபகாரியங்கள் உள்ளிட்ட அனைத்து காரியங்களையும் 72தாத்த காரு வீரக்கோவிலில் வழிபாடு செய்த பின்னரே தொடங்குகின்றனர்.

தற்போது 72தாத்தகாரு வீரக்கோவிலில் தற்போது பீடம் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகிறது. மழை வேண்டி தாத்தகாரு கோவிலில் வழிபாடு நடத்தினாலும், ஆடு மாடுகளை விற்பதற்கும் பல்லிசகுனம் உத்தரவாக கிடைத்திடும். மேலும் பயந்த சுபாவம் உள்ள பெண்கள் இந்த கோயிலுக்கு வந்து வணங்கினால், பயம் குறைவதுடம், நினைக்கு காரியங்கள் நடைபெறுவதாக கூறப்படுகிறது.

தஞ்சமென வந்த ஒரு பெண்ணை காப்பாற்ற ஊரே துன்பம் அனுபவித்த இந்த நிகழ்வால், உயிரிழந்த அனைவரையும் தெய்வமாக போற்றி இன்று வணங்கப்படும் இந்த வீரக் கோவிலுக்கு மதுரை செல்லும்போது அவசியம் சென்று தரிசித்து வருவோம்.

# ஒரே நிமிடத்தில் சிவஸஹஸ்ர நாமம்



ஸ்ரீ ராம ராம ராமேதி
ரமே ராமே மனோ ரமே
சஹஸ்ர நாம தத்துல்யம்
ராம நாம வரானனே

இந்த ஸ்லோகத்தைப் படித்தால் விஷ்ணு சஹஸ்ர நாமத்தை முழுக்கப் படித்த பலன் உண்டு என்ற விஷயம் அனைவரும் அறிவோம்

இதை போல் சிவ ஸஹஸ்ரநாமத் திற்கும் ஒரு எளிய வழியுண்டு.

சிவபெருமானால் உபதேசிக் கப்பட்ட இந்த அதியத்புதமான எட்டு நாமக்களை சொல்வ தால் 1008 திருநாமங்களை சொன்ன பலன் கிட்டும். அவ்வளவு மகிமை வாய்ந்தது அந்த எட்டு நாமங்கள்.

ஷிவோ மகேஷ்வரச்சைவ
ருத்ரோ விஷ்ணு பிதமஹா
ஸம்ஸாரவைத்ய ஸர்வேஷ
பரமாத்மா ஸதாசிவ

இதன் பொருள்:

| | |
|---|---|
| சிவ: | அனைத்து வித மங்களங் களையும் அளிப்பவன் |
| மகேஷ்வர: | முடிவில்லா மஹா அண் டத்தை உடையவன் |
| ருத்ர: | ருத்ரன் (சிவபெருமானின் வடிவங்களின் ஒன்று) |
| விஷ்ணு: | எங்கும் நிறைந்து இருப் பவர் |
| பிதமஹா: | ப்ரஹம்மனின் வடிவாக இருப்பவரா் |
| ஸம்ஸாரவைத்ய: | ஸம்ஸாரம்எனும் கொடிய நிலையிலிருந்து காப்பாற்றும் ஒரே வைத்தியர் |
| ஸர்வேஷ | |
| பரமாத்மா: | அனைத்து கடவுள்களினுள் இருக்கும் பரம்த்மா |
| ஸதாசிவ: | தென்னகச் சிவநெறியின் பரம்பொருளாகப் போற்றப் படுகின்ற சிவனின் வடி வம் |

இந்த எட்டு திருநாமக்களை ஒருவன் மூன்று முறை சொல்வதால் சிவபெருமானின் 1008 திருநாமங்களை சொன்ன பலன் கிட்டும்.

இன்றைய அவசர சூழ்நிலையில் 1008 நாமக்களை பாராயணம் செய்ய நேரம் இல்லாத சந்தர்பங்களில் இந்த எட்டு புனித நாமங்களை சொன்னாலே போதும் முழுவதுமாக சிவஸஹஸ்ரநாமம் சொல்லிய பலன் பெறலாம், சிவராத்திரி, பிரதோஷம் போன்ற நேரங்களில் சொல்வது சிறப்பு.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

www.aanmeegamalar.com



# வேடனுக்கு கட்டுப்பட்ட நரசிம்மர்

அன்பு, பக்தி, கடமை இவை இருந்தால் போதும் இறைவனை எளிதில் கண்டு கொள்ளலாம் என்பதை விளக்கும் ஒரு அற்புத நிகழ்வை ஆதிசங்கரரின் வரலாற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்டசராசரங்களையும் கிடுகிடுக்க வைத்த நரசிம்ம மூர்த்தி, ஒரு வேடனுக்கு கட்டுண்டு கைதியைப் போன்று அவன் பின்னால் சென்ற கதையை படியுங்கள். உங்களுக்கே புரியும்.

ஆதிசங்கரரின் சீடர்களுள் முக்கியமானவர் பத்மபாதர். கங்கை ஆற்றின் ஓரம் ஒரு முறை ஆதிசங்கரர் நின்று கொண்டிருக்கையில் கரையின் அந்தப் பக்கம் பத்மபாதர் நிற்பதை காண்கிறார். தனது சீடனை “உடனே வா” என்று அழைக்கிறார்.

குருநாதர் அழைக்கிறாரே என்று எதை பற்றியும் கவலைப்படாது அப்படியே ஆற்றின் மீது கால் வைத்து நீர் மேல் நடக்க ஆரம்பித்துவிட்டார் பத்மபாதர்.

என்ன ஆச்சரியம் அவரது குருபக்திக்கு கட்டுப்பட்டு, கங்காதேவி அவர் ஒவ்வொரு முறை பாதத்தை எடுத்துவைக்கும்போதும் ஒரு தாமரை மலரை தோன்றச் செய்தாள்.

அதன் மீது நடந்து வந்துவிட்டார் பத்மபாதர்.

பிறகு தான் தெரிந்தது தான் தாமரை பூக்கள் மீது நடந்து வந்தது. “எல்லாம். குருநாதரின் மகிமை” என்று மெய்சிலிர்த்து ஆதிசங்கரரின் கால்களில் வீழ்ந்தார்.

அது முதல் தான் அவருக்கு ‘பத்மபாதர்’ என்று பெயர் ஏற்பட்டது.

மிக தீவிர நரசிம்ம பக்தரான இவருக்கு எப்படியாவது நரசிம்மரை நேரில் காண வேண்டும் என்று ஆவல் மேலிட்டது.

ஆவல் கடைசியில் வைராக்கியமானது. எப்படியாவது நரசிம்மரை நேரில் கண்டு விட வேண்டும் என முடிவு எய்து காட்டில் கடும் தவமிருந்தார்.

ஒருநாள் அவ்வழியே ஒரு வேடன் வந்தான். தண்ணீரோ உணவோ இன்றி பத்மபாதர் பல நாட்களாக அங்கு அமர்ந்திருப்பதை (தியானம் என்றால் என்ன என்று அவனுக்கு தெரியாது) அறிந்து கொள்கிறான்.

“சாமி! எதுக்கு இங்கே வந்து கண்ணை பொத்திகிட்டு உட்கார்ந்திருக்கே? உனக்கு வீடு வாசல் இல்லையா? உன்னை பார்த்தா பாவமா இருக்கே” என்றான்.

“என்னை தொந்தரவு செய்யாதே. நான் தியானத்தில் இருக்கிறேன்”.

“அதெல்லாம் எனக்கு தெரியாது சாமி! எதுக்காக சாப்பாடு தண்ணி இல்லாம கண்ணை மூடி இருந்தே அதை சொல்லு!” என்றான்.

“நான் நரசிம்ம பிரபுவை எண்ணி தவமிருக்கிறேன்”.

“நரசிம்மமா? அப்படின்னா என்ன?”

வேடன் புரியாது கேட்கிறான்.

“சிங்க முகம், மனித உடல் கொண்டது அது. உன்னைப் போன்றவர்களுக்கு அது பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை”

“நீங்க சொல்ற மாதிரி அப்படி ஒரு மிருகத்தை காட்டில் நான் பார்த்ததே கிடையாதே! சரி நீ எங்கிட்ட சொல்லிட்டே இல்லே! அது என் கண்ணில் படாமலா போயிடும்!

இன்று சாயங்காலத்துக்குள் அதை புடிச்சுட்டு வந்துடுறேன்” என்றவனை பரிதாபமாக பார்த்தார் பத்மபாதர். “இவனுக்கு எப்படி விளங்க வைப்பது?’ என்று எண்ணிக் கொண்டார்.

வேடனின் எண்ணமெல்லாம் நரசிம்மத்தின் மேல் இருந்தது. அவன் காட்டில் கடுமையாக தேடி அலைந்தான். இதுவரை அவன் நுழையாத அடர்ந்த பகுதிகளில் எல்லாம் புகுந்தான்.

மான், முயல் என்று எத்தனையோ ஓடின. உணவைப்பற்றி அவன் கவலைப்படவே இல்லை.

தாகத்தையும் பொருட்படுத்தவில்லை. பல




www.aanmeegamalar.com



## சக்கர ஆசன நரசிம்மர்

**வேறு எங்குமே காணமுடியாத ப்ரயோக சக்கர ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஸ்ரீ நரசிம்மர். இடம் நாக்பூர் ராமர் கோவில்.**

மணிநேரங்கள் கடந்து மாலையாகி விட்டது.

“ஐயோ! அந்த சாமிக்கு கொடுத்தவாக்கை காப்பாற்ற முடியாமல் போயிற்றே !வாக்கை காப்பாற்றாதவன் பூமியில் வாழ தகுதியில்லாதவன்.

என் குலதெய்வமே! கந்தா அந்த மிருகத்தை என் கண் முன்னால் காட்டப்பா!” என்று உளமுருக வணங்கினான். பயனில்லை. நரசிம்மம் கண்ணில் படவில்லை.

இனியும் வாழ்வதில் அர்த்தமில்லை என்று உயரமான பாறை ஒன்றில் ஏறி, குதித்து உயிர்விட தயாரானான். அவனது கடமை உணர்வு அர்ப்பணிப்பு கண்டு அந்த ஸ்ரீ மன் நாராயணனே கலங்கி விட்டார். நரசிம்ம வடிவில் அவன் முன்னால் பிரத்யக்ஷமானார்.

“ஆகா! மாட்டிகிட்டியா!” என்று குதூகலமடைந்த வேடன், அவரை காட்டு கொடிகளைக் கொண்டு கட்டினான்.

வேதாந்திகளுக்கும், தபஸ்விகளுக்கும் கட்டுப்படாத அந்த பரம்பொருள் அந்த வேடனின் கட்டுக்கு பணிந்து நின்றது.

நரசிம்மத்தை இழுத்துக்கொண்டு பத்மபாதர் முன்னால் வந்தான்.

“சாமி இதோ பாருங்க இதுதானே நீர் கேட்ட நரசிம்மம்”.

பத்மபாதரின் கண்ணுக்கு நரசிம்மர் தெரியவில்லை. வேடனின் கையிலிருந்த காட்டுக்கொடிகள் மட்டும் அந்தரத்தில் சுற்றிக் கொண்டு நிற்பது தான் தெரிந்தது.

“அடேய்! பைத்தியமே அவன் என் அரிய தவத்திற்கே வர மறுக்கிறான். உன்னிடமா சிக்குவான்? வெறும் கொடிகளை காட்டி நரசிம்மம் என்கிறாய்?” என்றபடி ஏளனமாய் சிரித்தார்.

“இல்லே. சாமி இதோ இந்த கட்டுலஇருக்குது அது. நல்லா பாருங்க” வேடன் கூறுகிறான். அப்போது ஒரு அசரீரி கேட்டது.

“பத்மபாதா! வேடன் என்னை அடைந்தே தீர வேண்டுமென ஒரே குறியுடன் அலைந்தான்.

என்னைக் காணாமல் உயிரையும் விட துணிந்தான். நீயோ, அலைபாயும் மனதுடன் நான் வருவேனோ மாட்டேனோ என்ற சந்தேகத்துடன் தவமிருந்தாய்.

தவிர ஆணவமும் கொண்டாய். உன் கண்ணுக்கு எப்படி தெரிவேன்?” என்ற கூறியபடி மறைந்து விட்டார்.

ஒரு வேடனின் பக்திக்கு கட்டுப்பட்ட நரசிம்மன், தனக்கு காட்சியளிக்காமல் போனது பற்றி பத்மபாதர் வெட்கி தலைகுனிந்தார். அந்த வேடனின் கால்களில் வீழ்ந்து மன்னிப்பு கேட்டார்.

ஆதிசங்கரரின் வரலாற்றில் நடைபெற்ற உண்மை சம்பவம் இது. பக்திக்கு ஆணவம், நம்பிக்கையின்மைதான் பெரும் தடைக்கல் என்பதை உணர்த்தும் அற்புத புராண கதை.





# மகா சிவராத்திரியும் நான்கு கால பூஜையும்

## மகா சிவராத்திரி பூஜை காலங்கள்

முதல் கால பூஜை இரவு, 7:30 மணி;

இரண்டாம் கால பூஜை இரவு 10:30 மணி;

மூன்றாம் கால பூஜை நள்ளிரவு 12:00 மணி;

நான்காம் கால பூஜை அதிகாலை, 4:30 மணிக்கு.



மகா சிவராத்திரி: மாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்தசியன்று வருவது மஹா சிவராத்திரி மற்ற எல்லா சிவராத்திரிகளை விடவும் இதுவே சிறப்புடையது. பல்வேறு வகையான பெரிய நலன்களை இது வழங்குவது. மற்ற சிவராத்திரிகளில் பெறும் எல்லா பேற்றையும் இது ஒரு சேர வழங்குவதால் இது மஹாசிவராத்திரி என்று போற்றப்படுகிறது. மஹா சிவராத்திரியில் நான்கு காலங்களிலும் இரவில் பூஜை செய்ய வேண்டும். சிவபஞ்சாயதனம் கைக்கொண்டவர்கள் இரவில் பூஜையைத் தரித்து நற்பலன் பெற வேண்டும்.

சிவராத்திரியின் போது இரவு நான்கு சாமங்களாகப் பிரிக்கப்படுகிறது. அந்த நான்கு யாமங்களிலும் சிவலிங்கத்துக்கு விசேடமாக அபிஷேகங்கள் செய்யப்படுகின்றன. அந்த யாமப் பூசைகளின் போது எவையெவற்றால் வழிபடவேண்டும் என்பதை புனித நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

### முதல் சாமம்

இந்த முதல்கால பூஜை, படைக்கும் தேவன் "பிரம்மா" சிவபெருமானுக்கு செய்யும் பூஜையாகும். இந்த கால பூஜையில் "பஞ்ச கவ்வியத்தால்" (பசும்பால், பசுந்தயிர், பசுநெய், கோமயம், கோசாணம்) அபிஷேகம் செய்து, மஞ்சள் நிற பொன்னாடை அணிவித்தும், தாமரைப் பூவால் அர்ச்சனையும், அலங்காரமும் செய்து, பாசிப் பருப்பு பொங்கல் நிவேதனமாக படைத்து, நெய் தீபத்துடன் முதல் கால பூஜை ரிக் வேதபாராயணத்துடன் நடத்தப்படுகின்றது. இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் நம் பிறவி கர்மாக்களில் இருந்து விடுபட்டு நற்பலன்களை அடையலாம்.

### இரண்டாம் சாமம்

இந்த இரண்டாவது காலை பூஜையை காக்கும் தேவன் "விஷ்ணு". சிவபெருமானுக்கு செய்யும் பூஜையாகும். இந்த காலத்தில் பஞ்சாமிர்த அபிஷேகம் செய்தும், சந்தன காப்பு சாற்றியும், வெண்பட்டு ஆடை அணிவித்து அலங்காரம் செய்தும், அர்ச்சனைகள் செய்தும், இனிப்பு பாயசம் நிவேதனமாக படைத்து, நல்லெண்ணை தீபத்துடன், இரண்டாவது கால பூஜை யஜுர்வேத பாராயணத்துடன் நடத்தப்படுகின்றது. இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் தன தானிய சம்பத்துக்கள் சேரும்.

### மூன்றாம் சாமம்

இந்த பூஜை சக்தியின் வடிவமாக அம்பாள் பூஜிப்பதாகும். இந்த காலத்தில் தேன் அபிஷேகம் செய்தும் பச்சை கற்பூரம் மற்றும் வில்வ இலையைக் கொண்டு அலங்காரம் செய்தும், சிவப்பு வஸ்திரம் அணிவித்தும், ஜாதி மல்லி பூவைக் கொண்டு அர்ச்சனைகள் செய்து "எள் அன்னம்" நிவேதனமாக படைத்து, இலுப்பை எண்ணை தீபத்துடன் சாமவேத பாராயணத்துடன் பூஜை முடிக்கப்படுகிறது. இந்த காலத்திற்குரிய சிறப்பு என்றால் இதை லிங்கோத்பவ காலம் என்றும் இந்த காலத்தில் சிவபெருமானின் அடி முடியைக் காண வேண்டி பிரம்மா அன்ன ரூபமாக மேலேயும், மகாவிஷ்ணு வராக ரூபமாக பாதாள லோகத்தையும் தேடிய சிறப்புடையது இந்த காலம். இந்த காலத்தில் விரதமிருந்து பூஜிப்பதால் எந்தவித தீய சக்தியும் நம்மை அண்டாமல் இருக்க சக்தியின் அருள் கிடைக்கும்.

### நான்காம் சாமம்

இந்த நான்காவது கால பூஜை முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவர்களும், ரிஷிகளும், பூதகணங்களும், மனிதர்களும் அனைத்து ஜீவராசிகளும் சிவபெருமானை பூஜிப்பதாக கருதப்படுகிறது. குங்குமப்பூ சாற்றி, கரும்பு சாறு – பால் அபிஷேகம் செய்தும், நந்தியாவட்ட பூவால் அலங்காரமும், அர்ச்சனையும் செய்து அதர்வண வேதப் பாராயணத்துடன் சுத்தான்னம் நிவேதனமாகப் படைத்தும், தூப தீப ஆராதனைகளுடன் 18 வகை சிறப்பு அலங்கார அபிஷேக பூஜைகள் செய்யப்படுகிறது. மிக உயர்வான இந்த மகா சிவராத்திரி விரதத்தை இருந்து சிவபெருமானை வழிபட்டு அனைத்து செல்வத்தையும், வாழ்வில் மகிழ்ச்சியையும் அடைவோமாக!





www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com



# துவங்கிய செயல் அனைத்தும் நன்மையில் முடித்து வைக்கும் கோளாறு பதிகம் உருவான வரலாறு

திருஞானசம்பந்தர், தமிழ்நாட்டில், சைவ சமயத்தவர்களால் நாயன்மார்கள் என அழைக் கப்படும் அறுபத்து மூவருள் முதலாக வைத்து எண்ணப்படும் நால்வருள் ஒருவராவார்.

இவர் கி.பி. ஏழாம் நூற்றாண்டில், சீர்காழியில், பிராமணக் குடும்பத்திற் பிறந்தார்.இவரது தந்தையார் சிவபாதவிருதயர், தாயார் இசைஞானியார்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பல சிவத்தலங்களுக்கும் ஒன்றாகவே சென்று பாடல் களால் இறைவனை அர்ச்சித்துள்ளனர்.

திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் திரு மறைக்காடு (வேதாரண்யம்) என்கிற திருத்தலத்தில் இருந்தபோது மதுரையில் அரசாண்ட பாண்டிய மன்னன் சமணமதத்தில் பற்றுக் கொண்டிருந்தான்.

அவனுடைய மனைவி மங்கையர்க்கரசியோ சைவ மதத்தில் பற்றுக் கொண்டிருந்தார்.

பாண்டிய நாட்டில் சமண மதம் ஓங்குவதைத் தடுக்கும் பொருட்டு திருஞான சம்பந்தர் மதுரைக்கு எழுந்தருளி அங்கே சைவம் தழைக்க உதவ வேண்டும் என்கிற வேண்டுகோளுடன் அவருக்கு அழைப்பு விடுத்தார்.

அரசியாரின் அழைப்பினை மதுரை ஏவலர்கள் திருமறைக்காடு வந்து திருஞான சம்பந்தரிடம் தெரிவித்தனர்.

திருஞான சம்பந்தர் மதுரை செல்ல உடன்பட்டு திருநாவுக்கரசரிடம் விடைபெறச் சென்றார்.

திருநாவுக்கரசர், அந்தக் கணத்தில் கோள்களின் அமைப்பும் அன்றைய நாளும் தீமை பயக்கும் அறிகுறிகள் காட்டுவதாகக் கூறி சம்பந்தரின் பயணத்தை ஒத்திப்போடச் சொன்னார்.

“சிவனடியையே சிந்திக்கும் சிவனடியார்களை நாளும் கோளும் என்ன செய்து விடும்? அவை நன்மையே பயக்கும்” என்று கூறி பத்து பாடல்கள் பாடினார் திருஞான சம்பந்தர்.

அந்தப் பாடல்களின் தொகுப்பான பதிகமே கோளறு பதிகம் (பத்து பாடல்களின் தொகுப்புக்குப் பதிகம் என்று பெயர்) எனப் பெயர் பெற்றது. பதிகப்பயனுடன் சேர்த்து மொத்தம் பதினொரு பாடல்கள்.

கிரகங்கள் அவற்றின் பெயர்ச்சிகள் என்கிற பெயரால் பல்வேறு நம்பிக்கைகளில் தம்மை இழக்கும் மக்கள், இந்தப் பதிகத்தைப் படித்தால் கோள்கள் எந்த நேரத்திலும் நன்மையே பயக்கும் என்பது சைவ சமயத்தாருக்கு ஞான சம்பந்தரால் சொல்லப்பட்டிருக்கும் செய்தி.

இன்றும் ஏதாவது முக்கிய காரியமாகக் கிளம்பும் போதும், சகுனம் சரியில்லாத போதும், நல்லபடியாக முடிய வேண்டும் என்கிற வேண்டுகோளுடன் இந்தப் பதிகத்தை முழுதாக படித்துவிட்டு அந்த காரியத்தை செய்தால் சிவன் அருளால் அக்காரியம் நன்மையில் முடியும். இந்த கோளாறு பதிகத்தை படிக்கும் பழக்கம் இன்றும் பலர் கடைபிடித்துவருகின்றனர்.

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்

# யோகலட்சியமான துறவு எல்லாருக்குமானது

53 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: "மனிதனுக்காக இறைவனின் லட்சியம் என்ன? அவன் உலகக் கடமைகளிலிருந்து விடுபட்டு காட்டில் அலையும் துறவியாக வாழவேண்டுமா? அல்லது இல்லறத்தானாக நகரங்களில் வாழ்ந்து, உலகத்தின் சண்டைகள் மற்றும் பிரச்சனைகளுடன் இந்த உலக வியாபாரங்களில் சிக்கிக்கொள்ள வேண்டுமா?

இறைவனை அறிந்துகொள்ளமுடிகின்ற பல்வேறு வழிகளை சிறந்த குருமார்கள் காட்டியிருக்கின்றனர். துறவு ஒரு வழி. அது, ஸ்ரீ சைதன்யர், மகான் புத்தர் ஆகிய பல மகான்களால் போதிக்கப்பட்டிருக்கின்றது. ஒருமுறை ஸ்ரீ சைதன்யரின் சீடர் தனது பிச்சைப்பாத்திரத்தில் சில பழங்களைப் பெற்றபோது சிலவற்றை உண்டு விட்டு மீதமுள்ளவற்றை மறுநாளுக்கென வைத்துக் கொண்டார். ஆனால் அவர் 'நாளை'க்கான எண்ணம் வைத்துக் கொண்டிருந்த காரணத்தால் அவரது முகத்தை மீண்டும் பார்க்க விருப்பமில்லை என சைதன்யர் அந்தச் சீடரிடம் கூறினார். எனது குரு, ஸ்வாமி ஸ்ரீ யுக்தேஸ்வரரால் அளிக்கப்பட்ட பயிற்சியும் அதே போன்றது. அவர் கூறினார், "எல்லா வாழ்வாதாரமும் இறைவனிடமிருந்து வருகின்றது என்று ஞாபகப்படுத்திக்கொண்டு அன்றன்றைக்கு என்றபடி வாழ்."

நான் அவ்வாறே வாழ்ந்திருக்கின்றேன். இந்தியாவில் சிறிது காலத்திற்கு சுதந்திரமாகச் சுற்றித் திரிந்துகொண்டு இறைவனுக்கான என் நேசத்தில் ஆழ்ந்து, ஒரு தெய்வீக நாடோடியின் வாழ்க்கை வாழ்ந்தேன். அதைவிட அதிகமாக மகிழ்ச்சியாகவும் கவலையற்றும் எப்போதும் இருந்ததில்லை. அகத்தே எக்காலத்திலும் நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். புறத்தே இறைவனின் நாடோடியாக அடுத்த வேளை உணவு எப்போது அல்லது எங்கிருந்து வரும் என்று ஒருபோதும் அறியாமலும் அதைப்பற்றிக் கவலைப்படாமலும் அளவு கடந்த ஆனந்தமான சுதந்திரத்துடன் இருந்தேன். இறைவனை முழுமையாகச் சார்ந்திருக்கும் அந்தமாதிரியான



பயிற்சி உண்மையில் அற்புதமானது. ஒருமுறை சில தோழர்கள் என்னுடன் பதினைந்து நாட்களுக்கு இமயமலைக்கு வந்தனர். நாங்கள் எங்கள் உணவுக்கென எந்த ஏற்பாடும் செய்யவில்லை. நான் எனது இயல்பான ஆனந்தமான நிலையில் இருந்தேன்.

அந்த யாத்திரையின்போது. ஒரு நாள் ஒரு மகானைச் சந்தித்தேன். அவருடன் இறைவனைப்பற்றி பேசிக்கொண்டிருந்ததில் நேரம் கடந்துவிட்டதைப் பற்றிய கவனமே இல்லாத அளவுக்கு நான் மனம் ஒன்றிவிட்டிருந்தேன். என்னுடன் வந்தவர்கள் "வா, நாம் சென்று உணவருந்தலாம், நாங்கள் பசியாக இருக்கின்றோம்" என்று என்னை மௌனமாக வற்புறுத்திக்கொண்டிருந்தனர். ஆனால் எனக்கு சிறிதளவுகூடப் பசியில்லை. நான் என் ஆன்மாவிற்கு மிக அதிக ஊட்டமளிக்கும் உணவைப் பெற்றுக்கொண்டிருந்தேன். நான் இமயமலையில் ஒரு சிறிய தங்குமிடம், மிக மிக எளிமையான உணவு, சொற்ப உடை இவற்றுடன் ஆரோக்கியமாகவும் தெய்வீகத் திருப்தியுடனும் இருந்த பல அற்புதமான மகான்களைக் கண்டேன். அவர்கள் வாழ்ந்து கொண்டிருந்தது உண்மையில் ஓர் அழகிய ஆன்மீக வாழ்க்கை".

இயற்கையான நோய் தடுப்புச் சக்தியை விருத்தி செய்யவும் அதற்கு உபவாசம் குணமடைதலுக்கான ஓர் இயற்கையான வழியாகும். பல வியாதிகள், கவனமான முறையில் உப வாசம் இருப்பதனால் சொஸ்தமாகின்றன. ஒருவருக்குப் பலவீனமான இருதயம் இருந்தாலொழிய வழக்கமாக சிறு உபவாசங்கள் மிக நல்ல ஆரோக்கிய சாதனமாக யோகிகளால் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன.

குருதேவர் மேலும் அருளுகிறார்: "நீங்கள் ஆயுளை அதிகரிக்க முடியும். இப்பொழுது சராசரி ஆயுள் அறுபது வருடங்களாகும். மகாவதார பாபாஜியும் பெரிய மகான்களும் பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். வாழ்க்கையை முடிவில்லாமல்நீடிக்க முடியும். உணவினாலோ, மருந்தினாலோ, தேகப்பயிற்சியினாலோ, சூரியக் குளியலினாலோ மேலும் எல்லைக்குட்பட்ட மற்ற வழிகளினாலோ அல்ல, ஆனால் இறைவனின் அளவற்ற சக்தியுடன் தொடர்பு கொள்வதன் மூலமேயாகும். நாம் இந்த உடலைப்பற்றி மட்டும் நினைக்காமல் பரமாத்மாவைப்பற்றியும் நினைக்க வேண்டும். பரமாத்மாவுடன் ஒன்றுவதில் முழுமையை அடைந்தால் உடலிலும் முழுமையைக் காண முடியும். பெரிய மகான்கள் பரமாத்மாவுடன் ஒன்றுதலாகிய முழுமையை அடைந்தும்கூட தீவிரமான உடல் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதுண்டு. அது பரமாத்மாவின் எந்தக் குறைவினாலும் அல்ல; ஆனால் மற்றவர்களுக்கு உதவவேண்டி, அவர்களுடைய கர்மவினைகளின் பலன்களை இறை அனுமதியுடன் தங்களுடைய சொந்த உடல் செயற்படுத்துவதற்கு அவர்கள் விரும்புவதால் தான்".

குருதேவர் மேலும் கூறுகிறார்:ஜீவசக்தியை காத்துக் கொள்ளுங்கள், சரிவிகித உணவை ஏற்றுக் கொள்ளுங்கள். அது மட்டுமின்றி எப்பொழுதும் புன்சிரிப்புடன் மகிழ்ச்சியாக இருங்கள்.

தனக்குள்ளேயே ஆனந்தத்தைக் காணும் ஒருவன் தன் உடல் உணவிலிருந்து அல்லாமல் இறைவனிடமிருந்து பெறப்படும் மின்சார ஒட்டமாகிய உயிர் சக்தியினால் சக்தியூட்டப்படுவதைக் காண்கிறான். அதுமட்டுமின்றி, இடைவிடாத பிரார்த்தனையினாலும் தொடர்ந்த நம்பிக்கையினாலும் அந்த மாபெரும் சக்தியை எழுப்ப முடியும். கீழ்கண்ட பிரார்த்தனையை இடைவிடாது செய்யுங்கள்; "இறைவா! நீங்கள் என்னை குணப்படுத்த முடியும்.ஏனெனில் வைத்தியர்கள் மருந்துகளினால்எட்டமுடியாத ஜீவ அணுக்களையும் உடலின் சூட்சுமமான நிலைகளையும் நீதான் கட்டுப்படுத்துகிறாய்". இவ்வாறு அந்த மகாசக்தியிலிருந்துதான் எல்லா அணுசக்தியும் இந்த ஸ்தூல சரீரத்தின் ஒவ்வொரு செயலையும் காக்கவும் செய்கின்றது.

எனவே அப்படிப்பட்ட எல்லையற்ற சக்தியான அந்த மகா வைத்தியநாதனுடன் தொடர்பு கொள்ளுங்கள் !"

குருதேவரின்கருத்திற்கு ஏற்றவாறு பகவத்

கீதையில் ஒரு ஸ்லோகம் உள்ளது. என்ன வென்றால்,

ஸர்வ கர்மாணி மனஸா
ஸம்ன்யஸ்யாஸ்தே ஸுகம் வசி
நவத்வாரே புரே தேஹீ
நைவ குர்வன் ந காரயன்.

யோகி எல்லா கர்மங்களையும் மனதால் துறந்தவனாவான். அதனால் தனது கை கால்கள் மற்றும் மற்ற உறுப்புகளும் என்ன செய்தாலும் அவற்றிலெல்லாம் யோகிக்கு, தான் 'கர்த்தா' என்ற உணர்வு உண்டாவதில்லை. 'தான் சரீரத்தில் இருக்கிறேன்'. என்று மட்டும் தான் நினைக்கிறார். வீட்டில் நடக்கும் அனைத்து விஷயங்களும் குடும்பத்தலைவ (விருந்துபசாரம் செய்பவன்) னின் முன்னிலையில் நடக்கிறது. ஆனாலும் அவற்றில் 'கர்த்தா' அல்லது 'போக்தா' (அனுபவிப்பவன்) என்ற உணர்வில்லை. அதுபோல் இந்த சரீரமாகின்ற வீட்டில் ஒரு விருந்தாளி என்ற முறையில்தான் யோகி வாழ்கிறான். அதனால் அந்த யோகி அனைத்திற்கும் 'சாக்ஷி' மட்டுமே ஆகிறான். எதற்கும் கர்த்தா அல்லது போக்தா ஆவதில்லை. எனவே சரீரம் என்னென்ன செய்தாலும் எந்த கர்மாவும் யோகியை பாதிக்காது. (பகவத் கீதா அத்; 5 ஸ்லோகம் 13)

இந்த முறையில்தான் இறைவனைத் தேடுகின்ற ஒரு இறை பக்தன் வாழ்கிறான். அதேபோல்தான் எல்லா மனிதர்களும் வாழ வேண்டும் என்கிறார் குருதேவர். பரமாத்மாவை அடையும்வரை இவ்வாறுதான் வாழ வேண்டும்.

குருதேவரின் போதனையை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அந்த மகாவைத்திய நாதனாகிய பிரபஞ்சத் தந்தையுடன் தொடர்பு கொண்டு, அந்த மாபெரும் சக்தியுடன் இணைந் துக்கொள்வதுதான் மனிதனாகப் பிறந்தவனின் முதல் கடமை.

எனவே இறைவனுக்காக, இறைவனை அடைவதற்காக, இறைவனை அனைத்திற்கும் மேலாக நேசிக்கின்ற இறை பக்தனை தன்னுடன் இணைத்துக் கொள்வதன்பொருட்டு அதற்குத் தேவையான உபவாசம், இறைவனைச் சார்ந்திருப்பது, சுதந்திரமாக இருப்பது எவ்வாறு, எப்பொழுதும் புன்சிரிப்புடன் இருப்பது பற்றி, ஆயுளை அதிகரிக்கச் செய்வது பற்றி, உலகப் பொருட்களை துறப்பது பற்றி, ஆழ்ந்த தியானம் செய்வது பற்றி, மேலும், என்னென்ன தேவைப்படுகிறதோ அவற்றையெல்லாம் உடனிருந்து கற்றுத்தருவான் அன்புத் தந்தை இறைவன். பின்னர் அவற்றைச் செய்யவைத்து அந்தப் பக்தனுக்கு, எந்தத் துன்பங்களுக்கும் இடமின்றி, மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்காக அவனை, தன்னுடைய பாதுகாப்புக் கோட்டையாகின்ற இறை சாம்ராஜியத்திற்கு சுதந்திரமாக வாழ்வதற்காக அழைத்துச் செல்வான். இறைவனின் தொடர்பு ஏற்பட்டாலே அவனுக்கு எந்த பயமும் இல்லை. ஏனென்றால், பின்னருள்ள அவனுடைய வாழ்க்கை இறை வழிகாட்டுதலினால்தான் நடைபெறும். யாரொருவன் தன் ஆத்மாவின் வழிகாட்டுதலினால் (இறைவழிகாட்டுதலினால்) வாழ்கிறானோ அவன் சுதந்திரனாவான். அவன் இறைவனிடம் இரண்டறக்கலக்கும் முன்னரே சுதந்திரப் பறவையாக வாழ்வான்.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

## திருமயிலை கபாலீச்சரத்தில் பங்குனி பெருவிழா–2019



11.03.2019: கொடியேற்றம்
13.03.2019: அதிகாரநந்தி
15.03.2019: வெள்ளி ரிஷப வாகனம்
17.03.2019: திருத்தேர்
18.03.2019: அறுபத்துமூவர்
19.03.2019: பிச்சாடனர் கோலவிழா
20.03.2019: திருக்கல்யாணம்

aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ–புத்தகத்தையும்
இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
ஆன்மிகமலர்
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள்,
உடல்நலன், பலன்கள், இ–புத்தகம் போன்றவற்றை
எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில்
பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
♦♦♦
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# நவ வியாகரண பண்டிதன்

பீங்கான் தட்டில் வரையப் பட்டிருக்கும் பூக்கள்,நாம் விரும்ப போடப்பட்டுஇருக்கிறது. இம்மாதிரி வர்ணனை, வர்ண ஜாலங்களை அனுபவிக்கின்ற மனதினை எங்கு பார்க்க முடியும்? இதுபோல, பகவான் மனதினில் நம் அணிகலன்களைப் பார்க்கலாம்.

தீபாவளிக்கு அணிகலன் வாங்குகிறார்கள். நிறங்கள் விளங்குகிற துணி. இந்த நிறங்கள் நாம் விரும்புவதற்கு தரப்பட்டிருக்கின்ற வரப்பிரசாதம். இதுபோல, பகவான் பெருமையை நன்றாக அறிதல் வேண்டும். தேவை எல்லாம் தேவை என்று பார்க்கிறோம்.



யார் யார் தேவையினை எந்த வண்ணம் வைக்கப்பட்டு இருக்கின்றனவோ, அதை நாம் எண்ணப் பார்க்கிறோம். பார்க்கின்ற பொருளிலெல்லாம் பரம்பொருளை எப்படிப் பார்ப்பது? யாரையாவது பாரம்பொருள் என்று ஏற்றுக் கொள்கிறோம்.

மனிதரிடம் இருக்கின்ற கருணை என்பது ஏற்றமாகும். மனிதன் காட்டுகிற அன்பு, அடுத்த மனிதனோடு பழக, அவனுக்குக் கிடைத்து இருக்கின்ற அன்பு நிலை. அன்பர்களை எப்படிப் பார்க்க முடியும்? என் மீது அன்பு வைத்து, அன்பில் குழுமியவர்களை.. அந்த ஆனந்தத்தில் தான் அன்பைப் பார்க்கிறேன்.

எதிலும் கருத்தாக இருக்கின்ற மையப்பொருளையே வ்யாகரணம் சொல்கிற நியாயங்களாகும். ‘நியாயம்’ என்பது தியாகம் விளங்குகின்ற தன்மை. ‘தியாகம்’ என்பது விளங்குகிற மனிதர்களைப் பார்த்தல்.

கண்ணால், கருத்தால் எங்கும் காண்கிற பெரிய நிலை என்பதுதான் நித்யமும் ஏகாந்தமாய் பூசிக்கிற ஒரு வழிபாடாகும். வழிபாடு என்பதில் வந்தனம்/ வணக்கம் இருக்கிறது. அந்த வணக்கத்தில் தான் எல்லோர் மனமும் அங்ஙனம் நிறைவாக பண்டிதனின் திருவாளாய் விளங்குகிறது.

இதுபோல ஒன்பது வியாகரணங்களை பகவான் சிந்தித்து சொன்னான். யோசனையை யோசியுங்கள். தொடர்ந்து இருக்கின்ற யோசனையை எதற்கு அது அங்கேயே இருக்கிறது? என்று நாம் எந்தக் கருத்தைச் சொல்கிறோம்.

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு
சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன்,
போன் 098410 28028

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்





# சனிதோஷம் நீக்கி, பிறவியில்லாத நிலையைதரும் சிவஸ்தலம்



சிவஸ்தலங்கள் ஒவ்வொன்றும் ஒரு சிறப்பை பெற்றிருக்கும், அந்த வகையில், திரும்பிய பக்கமெல்லாம் கோயில் உள்ள நகரமான கும்ப கோணத்தில் உள்ள தேப்பொருமாமாநல்லூர் சிவன் கோயில், சனிதோஷத்தை தீர்ப்பதுமட்டு மின்றி, பிறவாநிலையை அருளும் திருத்தலமாக திகழ்கிறது.

இந்த கோயிலுக்கு எல்லோராலும் செல்ல முடியாது, பிறவா நிலை உடையவர்கள் மட்டுமே இத்தலத்திற்கு செல்லமுடியும் என்பது இத்தலத்தின் சிறப்புகளில் ஒன்று. இத்தலத்து இறைவனின் புராணத்தை பார்ப்போம்.

சிவபெருமானும், பார்வதி தேவியும் பூலோக மக்களின் வாழ்க்கையை நேரில் பார்த்துத் தெரிந்து கொள்வதற்காக, பூலோகம் வந்திருந்தனர். மறுநாள் இறைவனைச் சனி பகவான் பிடிப்பதற்கான நேரமாக இருந்ததால், சனி பகவானும் அவர்களைப் பின் தொடர்ந்து பூலோகம் வந்திருந்தார்.

இதையறிந்த பார்வதி தேவி சனியிடம், ‘சனி பகவானே! ஏன் எங்களைப் பின் தொடர்ந்து வந்திருக்கிறாய் ?’ என்றார்.

உடனே சனி, ‘அன்னையே! நான் இறைவனைப் பிடிப்பதற்கான நேரம் வந்து விட்டது. நாளை காலை ஏழே கால் நாழிகைப் பொழுது மட்டும், அவரைப் பிடித்துக் கொள்ளப் போகிறேன்’ என்றார்.

அதைக் கேட்டு கோபமடைந்த பார்வதி தேவி, ‘சனியே ! இறைவன் உனக்கு அளித்தப் பணியைச் செய்கிறேன் என்று, அவரையும் பிடித்துத் துன்புறுத்த நினைக்கிறாயே.. நீ செய்வது சரியா?’ என்றார்.

‘தாயே! இறைவன் எனக்கு அளித்த பணிக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருந்து கொண்டிருக்கிறேன். அதே வேளை, இறைவன் எனக்கு உருவாக்கிக் கொடுத்த விதிமுறைகளைப் பின்பற்றியே நான் என் பணியைச் செய்து வருகிறேன். அதில் இறைவன், மக்கள் என்று எந்த வேறுபாடுகளுமில்லை. நீதிக்கு முன்பு அனைவரும் சமம்தானே’ என்றார் சனி பகவான்.

பார்வதி தேவியோ, ‘சனியே! நாளை காலையில் இறைவனை நீ எப்படிப் பிடிக்கிறாய் என்று நான் பார்க்கிறேன்’ என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றார்.

மறுநாள் காலையில் சனி பகவான், சிவபெருமான் இருந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தார்.

அதைக்கண்ட பார்வதி தேவி, இறைவனை அங்கிருந்த அரச மரத்தின் பின்னால் மறைந்து இருக்கச் சொன்னார். இறைவனும் மரத்தின் பின்னால் மறைந்து கொண்டார். அதைக் கண்ட சனி பகவானும் அந்த மரத்தைப் பார்த்தபடி தூரத்திலேயே நின்று கொண்டிருந்தார்.

ஏழே கால் நாழிகைப் பொழுது கழிந்தது. அதன் பிறகு பார்வதி தேவி சனி பகவானை பார்த்து, ‘நீ சொன்ன நேரம் முடிந்து விட்டது. இன்று உன்னால் இறைவனைப் பிடிக்க முடியாமல் போய்விட்டதே’ என்றார்.

‘அன்னையே! நான் இறைவனைப் பிடித்திருந்ததால் தான், அவர் அந்த மரத்தின் பின்னால் ஏழே கால் நாழிகைப் பொழுது மறைந்து இருக்க வேண்டியதாயிற்று. இப்போது அந்தநேரம் முடிந்து விட்டது, நான் வருகிறேன்’ என்று சற்றே ஆணவத்துடன் சொன்ன சனி பகவான் அங்கிருந்து திரும்ப நினைத்தார்.

அரச மரத்தின் பின்னால் நின்றிருந்த சிவபெருமான், சனி பகவானின் பேச்சைக் கேட்டுக் கோபம் கொண்டார். பின்னர் மகாமந்திர பைரவராகத் தோன்றி, சனி பகவானைத் தூக்கி, அவரது உடலை இரண்டாகப் பிளந்தார்.

அதிர்ச்சியடைந்த சனி பகவான், ‘இறைவா! நீங்கள் கொடுத்த பணியைச் செய்த எனக்கு இந்த தண்டனை ஏன் ? நான் என் பணியைச் செய்யாவிடில், இந்த உலகத்தில் ஆணவக் காரர்களும், கொடுமைக்காரர்களும் அதிகரித்து விடுவார்கள். நான் அன்னையிடம் ஆணவமாகப்



பேசியதை மன்னித்து, என்னை முன்பு போல் பணி செய்திட உதவுங்கள்' என்றார்.

பார்வதியும் சனி பகவானைத் துன்புறுத்த வேண்டாம் என்று இறைவனை வேண்டினார். இதையடுத்து இரண்டாகப் பிரிந்த சனி பகவானின் உடலை, ஈசன் ஒன்றாக்கினார்.

அப்போது அங்கு வந்த நாரதர், 'இறைவா! நீங்கள் சனி பகவானை இரண்டாகப் பிளந்த பாவம், தங்களைத் தொற்றிக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து விடுபட தங்களின் பன்னிரண்டு ஜோதிர்லிங்க உருவத்தினை, ஒரே இடத்தில் நேரில் பார்க்க வேண்டும்' என்றார்.

இறைவனும் அந்த இடத்தில் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களையும் காட்சியளிக்கச் செய்தார். அவருடைய பாவம் நீங்கியது. உடனே நாரதர் அவரிடம், 'பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்களும் காட்சியளித்த இந்த இடத்தில் கோவில் கொண்டு அருள வேண்டும். இங்கு வந்து வழிபடுபவர்களுக்குப் பல்வேறு பயன்கள் கிடைக்கும் என்றாலும், மறுபிறவி இல்லாதவர்கள் மட்டுமே இந்த இடத்திற்கு வந்து வழிபட முடியும் என்கிற சிறப்புடன் இத்தலம் இருக்க அருள வேண்டும்' என்று வேண்டினார். இறைவனும் நாரதர் சொன்னதை ஏற்று, அந்த இடத்தில் கோவில் கொண்டார்.

இத்தலத்தின் பெருமையை அறிந்த அகத்திய முனிவர், இங்குள்ள சிவபெருமானை வழிபட வந்து கொண்டிருந்தார். ஆனால் அகத்தியருக்கு இன்னும் ஒரு பிறவி எடுக்க வேண்டிய நிலை இருந்ததால், அவர் அங்கு வருவதை சிவபெருமான் தடுக்க நினைத்தார்.

மகரந்த மகரிஷியை அழைத்த ஈசன், அகத்தியர் அந்த இடத்திற்கு வந்து விடாமல் தடுக்கச் சொன்னார். அந்த மகரிஷியும், அகத்தியர் வந்து கொண்டிருந்த வழியில் மகரந்தப் பூக்களாக மாறி வழியை அடைத்து நின்றார். தான் செல்லும் வழியில் திடீரென்று பூக்களாக இருப்பது ஏன்? என்று சிறிது நேரம் கண்களை மூடித் தியானித்தார்.

அப்போது வழியை மறைத்துக் கொண்டிருப்பது மகரந்த மகரிஷி என்பது தெரிந்தது. உடனே அகத்தியர், 'மகரந்த மகரிஷியே! உடனடியாக இந்த இடத்தை விட்டு அகன்று, இறைவனை வழிபட என்னை அனுமதியுங்கள்' என்றார். ஆனால், மகரந்த மகரிஷி அகலவில்லை.

இதனைக் கண்டு கோபமடைந்த அகத்தியர், 'மகரிஷியே! இறைவனை வழிபடச் செல்லும் என்னைத் தடுத்ததால், மலர் போன்ற உன் முகம் சிங்கத்தின் முகம் போன்று மாறட்டும்' என்று சாபம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து, மகரந்த மகரிஷியின் முகம் சிங்க முகமாக மாறி விட்டது.

தன் நிலையைக் கண்டு வருந்திய மகரிஷி, 'அகத்திய முனிவரே! நான் வேண்டுமென்று உங்களை வழிமறித்து நிற்கவில்லை. மறுபிறவி இல்லாதவர்கள் மட்டுமே இந்தத் தலத்து இறைவனை வழிபட முடியும். தங்களுக்கு மறுபிறவி ஒன்று இருப்பதால், தங்களை இத்தலத்துக்கு வரமுடியாதபடி செய்ய, இறைவன் பணித்தார். அதனால் தான் இது நிகழ்ந்தது' என்றார்.

இதனால் கோபம் குறைந்த அகத்தியர், 'மகரந்த மகரிஷியே! இந்த உலகில் யாரும் வழிபாடு செய்யாத பொருட்களைக் கொண்டு, இத்தலத்து இறைவனை வழிபட்டால் நான் கொடுத்த சாபம் நீங்கி, உனக்குப் பழைய முகம் கிடைக்கும்' என்று கூறிவிட்டு, வந்தவழியே திரும்பிச் சென்றார்.

## விமோசனம்:

அகத்தியரின் சாபத்தால் சிங்க முகம் பெற்ற மகரந்த மகரிஷி, தினமும் அங்குள்ள சிவலிங்கத்திற்கு புதிய வகை மலரைக் கொண்டு வழிபாடு செய்தார். இன்று ஒரு வகை மலரைக் கொண்டு வழிபாடு செய்தால், மறுநாள் வேறு ஒரு மலரைக் கொண்டு வழிபடுவார். இந்த வழிபாடு ஐம்பது ஆண்டுகள் தொடர்ந்தது.

ஒரு நாள் மகரந்த மகரிஷி, சிவலிங்கத்தை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் கழுத்தில் அணிந்திருந்த ருத்ராட்ச மாலை அறுந்து, லிங்கத்தின் மீது விழுந்தது. இதையடுத்து ஜோதி வடிவில் இறைவன் அவருக்கு காட்சியளித்தார்.

இதனைக் கண்டு மகிழ்ந்த மகரிஷி, ஒருமுக ருத்ராட்சம் முதல் பதினான்கு முகம் கொண்ட ருத்ராட்சம் வரை அந்த சிவலிங்கத்தின் முன்பாகச் சமர்ப்பித்து வழிபாடு செய்யத் தொடங்கினார். பதினான்கு முகம் கொண்ட ருத்ராட்சத்தைக் கொண்டு வழிபட்டபோது, சிவபெருமான் மகரிஷிக்கு காட்சி தந்தார். அவரது முகம் முன்பு போலவே பூ முகமாக மாறும் என்று அருளாசி கூறினார். இறைவன் அருளியது போலவே மகரிஷியின் முகம் மாறியது.

அப்போது சிவபெருமான், 'மகரிஷியே ! அகத்தியர் அளித்த சாபத்தால் மட்டும், உனக்கு சிங்க முகம் வரவில்லை. கடந்த பிறவியில் வேடனாகப் பிறந்த நீ, பல விலங்குகளை வேட்டையாடி கொன்று குவித்தாய். உனது பாவத்திற்குத் தண்டனையாகத்தான் அகத்தியர் உனக்குச் சாபமளித்து உனது முகத்தைச் சிங்க முகமாக மாற்றும் நிலை ஏற்பட்டது. நீ முற்பிறவியில் கொன்ற விலங்குகள் அனைத்தும், இப்பிறவியில் பூக்களாகத் தோன்றி, உன் மூலம் என்னை வந்தடைந்தன. இந்தக் கோவிலில் இருந்த சிவலிங்கத்தில் பட்ட பூக்கள் அனைத்திற்கும், மறுபிறவி இல்லாமல் போனது. உனக்கும் மறுபிறவி கிடையாது' என்றார்.

மறுபிறவியில்லாத நிலைக்குத் தன்னை உயர்த்திய இறைவனுக்கும், அகத்திய முனிவருக்கும் நன்றி தெரிவித்தார் மகரந்த மகரிஷி.

மறுபிறவி இல்லாத நிலையை கொண்டவர்கள் மட்டுமே இந்த ஆலயத்திற்கு வர முடியும் என்பது இதன் தனிச் சிறப்பாகும். கோவிலுக்கு வருபவர்களுக்கு வில்வ இலை பிரசாதமும், ருத்ராட்சமும் வழங்கப்படுகின்றன.

மேலும் விபரங்களுக்கு:
9443527247

மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

# உடம்பு அழிந்த பிறகு, முக்தி என்பது பயனற்றது
# உடம்பு உயிர் கொண்டு நடமாடும் போது,
# அடையும் முக்தியே சிறந்த முக்தி

சித்தர்களின் மிக உறுதியான இறுதி நோக்கம் முக்தி அடைதலே ஆகும். அந்த முக்தியை நோக்கி மனிதன் பயணப்படுவதற்கு ஆத்மாவும், அதை தாங்கி நிற்கின்ற உடலும், பலம் பொருந்தியதாக அமையவேண்டும் என்று அவர்கள் கருதி, உடல் ஒழுக்கத்திற்கான பயிற்சிகளையும், மூலிகை வகைகளையும் சொன்னதோடு மனதை செம்மைப் படுத்தி குண்டலினி சக்தியை பயன்படுத்தும் போது, ஏற்படக் கூடிய விளைவுகளையும் அதன் பிறகு வந்த அத்தியாயங்களில் தொடர்ச்சியாக பார்த்தோமே தவிர, முடிவான நிலையான முக்தியை அவ்வளவு அதிகமாக நாம் சிந்திக்கவில்லை. காரணம், முக்தி என்பது இறைவனின் தரிசனம் என்ற ஒரே கருத்தை கொண்டிருந்தாலும் கூட, அது பல்வேறுபட்ட ஞானிகளின் பார்வையில், பலவகை அனுபவ களஞ்சியங்களாக இருந்தது அவற்றை சுருக்கமாக பார்க்க முடியாது விரிவாக காணவேண்டும் எனவே முக்தியை சற்று விரிவாக காண்போம்.



நமது பாரத திருநாட்டில் தோன்றிய தத்துவங்களும், சமயங்களும் இருவகையான முக்தி நிலையை பற்றி சிறப்பித்து பேசுகிறது எனலாம். பஞ்ச பூதங்களின் செயற்கையால் உருவான இந்த உடம்பு அழிந்த பிறகு, முக்தி என்பது பயனற்றது. உடம்பு, உடம்பாக உயிர் கொண்டு நடமாடும் போது, அடைய கூடிய முக்தியே சிறந்த முக்தி என்பது ஒருவகையாகும். உயிரோடு இருக்கும் போது, அடையும் முக்திக்கு ஜீவன் முக்தி என்று பெயர். அப்படி அடைந்த ஞானியை, ஜீவன் முக்தர் என்றும் அழைக்கிறார்கள். உடம்பை விட்டு உயிர் பிரிந்த பிறகு, ஆத்மா இறைவனோடு கலப்பதற்கு விதேக முக்தி என்பது பெயராகும். அதாவது, உடம்போடு பெற்றால் ஜீவன் முக்தி. உடம்பு இல்லாமல் பெற்றால் விதேக முக்தி என்று இரண்டு வகை முக்திகள் யோகிகளால் அடையாளம் காட்டப்படுகிறது. இந்த முக்திகளை பற்றி மிக ஆழமான இந்திய சிந்தனையை உணர்ந்து கொண்டால் இன்னும் தெளிவு நமக்கு ஏற்படும்.

பிறக்கின்ற போது, இறக்கின்ற தேதியோடு பிறக்கிறோம். ஒருநாள் இந்த உலகைவிட்டு, உறவுகளை விட்டு நமது உடம்பையே விட்டு சாகப்போகிறோம் என்ற எண்ணம் வருகின்ற போது, அச்சம் வருகிறது. ஆனால், உடம்பு மட்டும் தான் சாகப்போகிறதே தவிர, நமது ஆன்மா மரணமடைய போவதில்லை. அதற்கு மரணமே இல்லை என்ற இரகசியம் நம்மில் பலருக்கு தெரிவது கிடையாது. ஆத்மாவின் உண்மை இயல்பை அறிந்து கொள்ளுகிற போது, எமன் வருகின்ற நாளை எண்ணி கவலைப்படாமல் புதிய பயணத்தை துவங்க ஆனந்தமாக காத்திருப்போம். மரண பயம் இல்லாத இந்த நிலையை சதுர்மறை என்று அழைக்கப்படுகின்ற நமது நான்கு வேதங்கள், ஆத்ம விடுதலை என்று அழகாக அழைக்கிறது. இந்த ஆத்மா விடுதலையை இறைவழிபாடு வரம்பு கடந்து ஓடுகின்ற புலன்களை அடக்கி வாழுதல், மனதை ஒருமுகப்படுத்துதல் போன்றவற்றால் எளிதாக பெறலாம் என்று வேதங்கள் கூறுகின்றன.

ஆத்மாவை தீ சுடுவது இல்லை. நீர் இரப்படுத்துவதில்லை. ஆயுதங்கள் ஊனப்படுவது இல்லை. காரணம், ஆத்மாவிற்கு அழிவே இல்லை. ஆத்மா தற்காலிகமாக வாழுகின்ற இந்த உடல் மட்டும் தான் மரணத்தால் அழிந்து போகிறது. வாழுகிற வாழ்க்கையில், நாம் செய்த வினைப்பயனாக கிடைக்கின்ற பாவ புண்ணியங்களை அனுபவிப்பதற்கு ஆத்மா வேறொரு உடலை நாடி போகிறது. பற்றுகளை விட்டு விட்டால், ஆசைகளை துறந்துவிட்டால், செயல்களால் ஏற்படும் பலன்களை தியாகம் செய்து விட்டால், கர்ம வினைகள் அற்றுப் போய்விடுகின்றன. இதனால், பிறப்பற்ற நிலை ஏற்படுகிறது. பொய்மையிலிருந்து உண்மைக்கு வருவது போல, இருளிலிருந்து வெளிச்சத்திற்கு வருவதை போல, இறப்பிலிருந்து இறவாமைக்கு வருவது தான் உண்மையான முக்திநிலை என்று பல உபநிடங்கள் ஓங்கிய குரலில் உறுதியாக பேசுகின்றன.

ஜீவன் என்பது பல்லாயிரம் பிறவிகளை எடுத்து, இறுதியாக எடுத்திருக்கும் பிறவியே மனிதப்பிறவியாகும். மனிதனாக பிறந்திருப்பது பாவத்தின் சம்பளத்தால் அல்ல. அறிய தவத்தின் பலநாள் ஆகும். காரணம், தெய்வமாக இருந்தால் கூட அது மனிதனாக பிறந்தால் மட்டுமே முக்தி என்ற உயரிய நிலையை அடைய இயலும் கர்மா ஏற்படுத்திய தடைகளில் கட்டுப்பட்டு கிடக்கிற ஆத்மா ஜனனம், மனனம், மரணம் என்ற சக்கரத்திற்குள் அகப்பட்டு கொண்டு, வெளியே வரமுடியாமல் துடித்துக்கொண்டிருக்கிறது. இந்த சக்கரத்தை உடைத்து விட்டால் கர்மாவை முற்றிலுமாக அழித்து விட்டால் ஆத்மா, அளவிட முடியாத அறிவு, அளவிட முடியாத சக்தி, அளவிட முடியாத ஆனந்தம் போன்றவற்றை தருகின்ற முக்தி நிலையை கைவல்ய நிலையை அடையலாம் என்று ஜைன மதத்தை உருவாக்கிய மகாவீரர் கருத்துரைக்கிறார்.


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com




முக்தி நிலை என்று யோகிகள் கூறுவதை, கைவல்ய நிலை என்று மகாவீரர் சொன்னதை, நிர்வாண நிலை என்று புத்தர் கூறுகிறார். விளக்கில் உள்ள தீபம் ஏற்றப் படுவதற்கு முன்பு எங்கே இருந்ததோ அணைக்கப்பட்ட பிறகு எங்கே செல்கிறதோ, அந்த மஹா சூன்யத்தில் நிரந்தரமாக கலந்துவிடுவது தான் நிர்வாணம், முக்தி என்பதெல்லாம். முக்தி அடையாமல் அது இப்படித்தான் இருக்குமென்று கூறுவது வெறும் கற்பனை என்பதனால், புத்தர் அதைப் பற்றி அதிகமாக விளக்கம் தராமல் உலக துன்பங்களுக்கு முற்றுப் புள்ளி வைப்பதே நிர்வாணம் என்று பொட்டில் அறைந்தாற்போல் பதில் தருகிறார்.

பகவான் விஷ்ணுவின் அவதாரங்களில் ஒருவாறாக கபில முனி கருதப்படுகிறார். இந்த கபிலரால் உருவாக்கப்பட்டது சாங்கியம் என்ற மகாதத்துவம். தத்துவங்களில் நான் சாங்கியமாக இருக்கிறேன் என்று கிருஷ்ண பரமாத்மா கூட அதற்கு சிறப்பு தருகிறார். அப்படிபட்ட சாங்கியம் முக்தியை பற்றி மிக தெளிவான விளக்கம் தருகிறது. சித் மயமான ஆத்மா சித் இல்லாத பிரகிருதியை அதாவது, பொருளை மையமாக பிடித்துக் கொண்டு பொருள்தான் நிஜம் என்று மயங்கி கிடக்கிறது. பிரகிருதியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, தான் எல்லை இல்லாத சக்தியுடைய பரமாத்மாவியின் ஒரு அங்கம் என்று அனுபவப்பூர்வமாக உணரும் போது, அடையக்கூடிய சிம்மாசனமே முக்தி என்று சாங்கியம் முக்திக்கு தத்துவரீதியான விளக்கத்தை தந்து மகிழ்கிறது.

ஆதிசங்கரர் உருவாக்கிய அத்வைதமும், ஸ்ரீ ராமானுஜர் உருவாக்கிய விசிஷ்டாத்வைதமும், ஸ்ரீ மத்வர் உருவாக்கிய துவைதமும், சிவனை வழிபடுகின்ற சைவமும், சக்தியை கொண்டாடும் சாக்தமும் முக்தி அடைவது தான் ஜீவன்களின் மிக முக்கிய பணி என்று அறுதியிட்டு கூறுகிறார்கள். வைதீகமான இந்து சமயப்பிரிவுகள் மட்டுமல்ல ஹிந்துமதமும், சரிபாதி இஸ்லாம் மதமும் கலந்து உருவான சீக்கியமும் கூட இறைவனோடு மனித ஆத்மாவை ஐக்கியப்படுத்துவதே வாழ்க் கை என்பதன் இறுதி குறிக்கோள். இந்த ஐக்கியத்தால் ஜீவன் அடைகின்ற ஒப்பில்லாத அனுபவம், குருபக்தியின் மூலம் கிடைக்கிறது. இறை ஐக்கியத்தில் சுகானுபவம் பெற்று, அந்த அனுபவத்தை பிறரும் அடையும் வண்ணம் செய்யவேண்டும் அப்படி செய்வதே முக்தியின் முழுமை நிலையாகும் என்று சீக்கியம் கூறுவது மிகச் சிறந்த மனிதாபிமானமிக்க கருத்தாகும்.

சமய பிரிவுகளுக்குள் முக்தியை பற்றி இத்தனை விதமான கருத்துக்களும், சிறப்புகளும் இருப்பதற்கு சித்தர்கள் முக்தியை பற்றி பகிரங்கமாக சொன்ன அனுபவங்களே காரணம் என்று கூறினால் அது மிகையாகாது. இந்திய தத்துவங்கள் என்று எதை எடுத்தாலும், அவை அனைத்துமே சித்த தத்துவங்களில் ஆங்காங்கே விரவி கிடப்பதை காணலாம். சித்தர்கள் இயல்பாக மக்கள் மொழியில் கூறியதை தத்துவப்பிரிவுகள் இலக்கண மொழியில் சொல்கின்றன என்று சொன்னாலும் அதுவும் சரியாகத்தான் இருக்கும். உயிர் தங்கி இருக்கின்ற உடம்பும், உடம்பால் பெறுகின்ற உலகியல் இன்பமும், கல்வியும், ஜீவன்களின் அனுபவமும் இறைவனை அடைவதற்கு பயன்பட வேண்டும். அதன் பெயர் தான் பிறப்பற்ற நிலை என்று திருமூலர் சொல்கிறார்.

அதாவது மாயா உலகத்திலிருந்து விடுபட்டு, உண்மையான சிவபோகதுக்குள் ஆத்மா அழுந்தி விட வேண்டும். சிவத்தில் ஜீவனும், ஜீவனில் சிவமும் ஒன்றாக கலந்து இன்புற்று இருப்பதே உண்மையான முக்தி. பிறப்பறுப்பதும் பேரின்பம் அடைவதும், ஆன்ம பயணத்தின் இறுதி நிலை என்று கூறுகின்ற சித்தர்கள், அந்த முக்தி நிலையை அடைவதற்கு முன்பே நாம் சொன்ன படி யோக மார்க்கங்களை மட்டும் காட்டவில்லை. வேறு பல மார்க்கங்களையும் குறிப்பாக சிவ போகத்தை ஜீவன் சுலபமாக அடைவதற்கு தாந்திரீக மார்க்கங்களையும் கூறி இருக்கிறார்கள். அவர்கள் கூறிய இந்த மார்க்கத்தை அறியாமல், சித்தர்களின் முக்தி அனுபவத்தை முழுமையாக தெரிந்து கொள்ள இயலாது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434



# சிவனின் காரியங்களும் பல்வேறு ரூபங்களும்

### ப்ரபஞ்சத்தை உண்டாக்குவது

சிவபார்வதியை 'ஜகதஹ பிதரௌ', அதாவது, லோகத்திற்கு மாதா, பிதா என்று கூறுவர். ஸம்ஹாரத்தின்போது, புதிதாக நிர்மாணிப்பதற்குத் தேவையான சூழலை சிவனே உருவாக்குகிறார்.

1. சிவனின் டமருவிலிருந்து (ஒரு விதமான உடுக்கை) எழும் 52 வகையான நாதங்கள் 52 வகையாக ஒலிகளை, அதாவது பீஜ மந்திரங்களை உருவாக்கி அதன் மூலமாக பிரபஞ்சத்தை உருவாக்க வழி செய்துள்ளது. நந்நாத் சந்த தாரையைக் குறிக்கின்றது. தத தம் அதாவது ததாமி த்வம் (நான் உனக்கு வழங்குகிறேன்) என்னும் ஒலி, இந்த மூல ஒலிகளிலிருந்து பிறந்ததே. சிவன், இந்த ப்ரபஞ்சத்திற்கு, தன் ஞானம், தூய்மை, தவம் ஆகியவற்றை அளிக்கும் உத்தரவாதமாக இவ்வொலிகள் அமைந்துள்ளன.
2. சிவன், தன்னுடைய ஸங்கல்பத்தினாலேயே இந்த ப்ரபஞ்சத்தை உருவாக்க முடியும்.

### ஜகத்குரு

ஞானம் இச்சேத் ஸதாசிவாத் |
மோஷம் இச்சேத் ஜனார்த்தனாத் ||

கருத்து: சிவனிடமிருந்து ஞானத்தையும், விஷ்ணுவிடமிருந்து மோஷத்தையும் யாசிக்க வேண்டும். சிவனின் தலையிலிருந்து ஞானகங்கை தொடர்ந்து பொங்குகிறது.

முக்குணங்களை கடந்து செல்ல வைத்தல்: ஸத்வ, ரஜோ மற்றும் தமோ குணங்களை ஒருங்கே அழிப்பவர். அதாவது நம் அறியாமையை முழுமையாக நீக்குபவர் சிவன்.

### சிவனின் வெவ்வேறு ரூபங்கள்

#### அ. ருத்ர

ருத்ர என்ற வார்த்தையின் சில அர்த்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. 'ரு' என்றால் அழுவது. 'த்ரு' என்றால் ஓடுவது. யார் இறைவன் என் முன் தோன்ற மாட்டாரா என்ற ஆழ்ந்த தாபத்தோடு அழுது கொண்டே அங்குமிங்கும் ஓடுகி றாரோ, மற்றவரையும் அழ வைக்கிறாரோ, அவரே ருத்ரன்.
2. 'ருத்' என்றால் ஸம்ஸார ரூபமான துக்கம். யார் இந்த துக்கத்தைப் போக்குகிறார்களோ அவரே ருத்ரன்.

#### ஆ. அர்த்தநாரி நடேஷ்வர் (அர்த்தநாரீஷ்வர்)

சிவனிடம் சக்தி நிரம்பியிருக்கும் பொழுதுதான், அவர் செயல்பட ஆரம்பிக்கிறார். சிவாகம் என்ற புனித நூலில் விவரிக்கப்பட்டுள்ள, இரண்டில்லாத ஒன்றேயான அத்வைத தத்துவம், மாயையை இல்லை என்று தள்ளவில்லை, மாறாக, பரப்ரும்மத்தின் சக்தி வெளிப்பாடாக மாயையை ஏற்கின்றது. சிவ சக்தியின் தொடர்ச்சியான சேர்க்கையையே அத்வைதமாக கொள்கிறது.

#### இ. வேதாள்

வேதாளின் மூல வார்த்தை 'வைதாள்' என்பது. மாறுபட்ட தவறான போக்கைக் கூட தன்னுடைய ஆட்டத்துக்கு ஆட வைப்பவர் என்று பொருள். காதால் அறியப்படும் அஹத் மற்றும் அறிய முடியாத சூட்சுமமான அநாஹத் நாதத்தின் சேர்க்கை எழுப்பும் ஒலி அலைகளே 'வை' என்பதாகும். இது மாறுபாடுகளை சமனம் செய்கின்றது.



#### ஈ. நடராஜ்

சிவனுக்கு இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று ஸமாதி (உணர்வறியா உயர்ந்த நிலை); இன்னொன்று தாண்டவ அல்லது லாஸ்ய (நடனமாடும்) நிலை; ஸமாதி என்பது நிர்குண நிலை (வெளிப்படாதது); தாண்டவ அல்லது லாஸ்ய என்பது ஸகுண நிலை (வெளிப்பட்டது).

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது தலைப்பை, அங்க அசைவுகளால் வெளிப்படச் செய்வதே நடனம் அல்லது நாட்டியமாகும். இத்தகைய அங்க அசைவுகளை நடத்துபவர் 'நட்' எனப்படுவார். சிவன், இந்த நடராஜ ரூபத்திலே, இந்த நாட்டியக் கலையை ஆரம்பித்து வைத்தார் என்பது நமது பாரம்பரிய நம்பிக்கை. சிவனை, ஆத்யநாத் (முதன்மையான நடிகர்) ஆக கருதுவதால், நடராஜ் என்கிறோம். இப் ப்ரபஞ்சமே அவனின் நாட்டிய மேடை; நாட்டியம் ஆடுபவனும் அவனே; அதைக் காண்பவனும் அவனே. அவனுடைய நாட்டியத்தின் துவக்க ஒலியானது இவ்வுலக நடவடிக்கைகளை துரிதப்படுத்தி, இயங்க வைக்கிறது. அவன் நாட்டியத்தை நிறுத்தும் பொழுது, இவ்வுலகத்தை தன்னுள் கரைத்து, தனித்து ஆத்மானந்தத்தில் திளைக்கிறான். நடராஜனின் அடிப்படையான தத்துவம் இதுவே. நடராஜனின் நாட்டியம், ஐந்து திவ்ய காரியங்களை பிரதிபலிக்கிறது. அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத் தல் (மாயையில் மூழ்க வைத்தல்) அருளுதல் (மாயைக்கு அப்பாற்பட்டு அழைத்துச் செல்லுதல்).

சிவன் முன்பு செய்த நாட்டியத்தை, தண்டுகர்வி (ஒரு முக்கியமான சிவகணம்) பரத முனிவருக்கு காண்பித்தார். தண்டு செய்து காண்பித்ததால் தாண்டவம் எனப் பெயர் பெற்றது. பின்னர், பரத முனிவரால், மனிதர்களுக்கு கற்றுக் கொடுக் கப்பட்டு பரதநாட்டியம் என்றும் பெயர் பெற்றது.

**தாண்டவ நிருத்யம்:** எந்த நாட்டியத்தில் நம் உடம்பில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் சிவநாமம் எதிரொலிக்கிறதோ அதை தாண்டவ நிருத்யம்


ஆன்மிகமலர் மெயில் புக்

என்பர். வெவ்வேறு முத்திரைகளோடு கூடிய, ஆண்மைக்கே உரித்தான நடனமிது. ஆள்காட்டி விரலும் பெரு விரலும் இணைவது த்யான முத்ரா ஆகும்.

இதனால் குரு மேடும், சுக்கிர மேடும் இணைகின்றன. அதாவது, ஆண், பெண் தத்துவங்கள் இணைகின்றன. அதே போல், சிவன், லாஸ்ய நடனத்தை பார்வதியுடன் சேர்ந்து பெரும் விருப்பத்தோடு பரத முனி வருக்கு முன்னால் ஆடிக் காண்பித்தார். லாஸ்ய என்பது பெண்மை கலந்த நடனம். அதில் கை களிரண்டும் தன்னிச்சையாக இருப்பது அதன் சிறப்பு.

### சிவனின் மூர்த்தி விஞ்ஞானம்

ஒவ்வொரு தெய்வமும் ஒரு தத்துவமாகும். இந்த தத்துவங்கள் யுகம் யுகமாய் உள்ளன. தெய்வங்களின் தத்துவம் எப்பொழுதெல்லாம் அவசியமோ அப்பொழுது ஸகுண ரூபத்தில் வெளிப்படுகிறது. உதா. பகவான் விஷ்ணு காரியதிற்கேற்றபடி எடுத்துக் கொண்டது ஒன்பது அவதாரங்கள். மனிதன் காலப் போக்கில் தெய்வங்களின் பலவித ரூபங்களை பூஜை செய்ய ஆரம்பித்தான்.

### சிவனின் மூர்த்தியில் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றம்

#### மனித ரூபம்

சிவனின் மனித ரூபத்தில், நான்கு விதமான ஆபரணங்கள் உள்ளன.

1. டமரு

இது சப்த ப்ரம்மத்தைக் குறிக்கின்றது. இதிலிருந்து மூல ஒலியான ஐம்பத்திரண்டு எழுத்துக்களும், பதினான்கு மஹேச்வர சூத்திரங்களும் உருவாயின. இதன் மூலம் வர்ணமாலா உருவானது. பின்னர், ப்ரபஞ்சம் இதிலிருந்து தோன்றியது.

2. திரிசூலம்

திரிசூலத்தின் மூன்று பிளவுகள் குறிப்பதாவது

அ. முக்குணங்கள்: மூன்று குணங்களாகிய ஸத்வ, ரஜ, தம.

ஆ. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய வற்றுக்கு அடித்தளமாக விளங்குவது.

இ. விருப்பம், ஞானம், செயல்பாடு.

3. பாசம் (அல்லது) மான்

பாசம் என்பது காலபாசத்தைக் குறிக்கிறது. மான் நான்கு வேதங்களைக் குறிக்கின்றது.

4. பரசு

இது அறியாமையை அடியோடு வேரறுக்கும் சின்னமாக விளங்குகின்றது.

### சிவபிண்டியின் வடிவம்

பகாவின் (பெண்குறி) சின்னமாக விளங்கும் சாளுங்காவும், லிங்காவின் (ஆண்குறி) சின்ன மாக விளங்கும் லிங்கமும் ஒன்று சேர்ந்து பிண்டி உருவானது. இந்த பூமி, படைத்தலையும், சிவன் தூய்மையையும் உணர்த்துகிறார்கள். அதன்படி சாளுங்கா, வளமை, தூய்மை இரண்டும் ஒருங் கே அமையப் பெற்றுள்ளது. ஆகையால் இந்த ப்ரபஞ்சம், விந்துவால் உருவாக்கப் பட்டதல்ல, சிவனுடைய ஸங்கல்பத்தினால் உருவானது.

1. ஜ்யோதிர்லிங்கம்

பாரதத்தின் முக்கிய சிவஸ்தலங்களில் மொத் தம் 12 ஜ்யோதிர்லிங்கங்கள் உள்ளன. அவை ஒளிமயமாக வெளிப்பட்டன. பதின்மூன்றாவது லிங்கத்தின் பெயர் காலபிண்டம். பிண்டாவானது (மோக்ஷத்தை நாடும் ஜீவாத்மா) கால அளவை கடந்து நீடித்திருந்தால் காலபிண்டம் எனப் படுகிறது.

ஜ்யோதிர்லிங்கத்தின் அர்த்தம்:

தைத்திரீய உப நிஷத் கீழ்வரும் பன்னிரண்டு கொள்கைகளை ஜ்யோதிர்லிங்கமாக கூறுகிறது. அவை ப்ரம்மன், மாயா, ஜீவன், மனம், அறிவு, ஆழ்மனம், அஹம் பாவம் மற்றும் பஞ் சமஹாபூதங்கள்.

2. பாணலிங்கம்

இது ஒரு விதமான சிவலிங்கம். நர்மதை நதியில் கிடைக்கும் ஒரு குறிப்பிட்ட வடிவம் உடைய கல் பாணலிங்கம் எனப்படுகிறது.

யக்ஞவல்க்யசன்ஹிதா குறிப்பிட்டுள்ளபடி, பாணாசுரன் என்னும் அசுரன், பூஜிப்பதற்காக லிங் கங்களை தயாரித்து பின்பு, நர்மதாற்றங் கரையின் பக்கத்தில் உள்ள குன்றுகளில் வீசி எறிந்து விட்டான். அந்த லிங்கங்கள், குன்று களில் வழிந்தோடும் தண்ணீரில் மிதந்து வந்து நர்மதையில் சேர்ந்துவிட்டன. கங்கா, யமுனா நதிகளிலும் பாணலிங்கங்கள் கிடைக்கின்றன. சிவனுக்கு உகந்த பாணலிங்கமும், விஷ்ணுவிற்கு உகந்த சாளகிராமமும், துளையேயில்லாத சல வைக் கல்லைப் போன்றவை. அதில் தேய்மானம் எதுவும் கிடையாது. அதோடு கனமானவை.

மேலும் விவரங்களுக்கு:

hindujagruti தொ.எண்: 9380949626





# மனிதனுக்கு வரும் 4 கண்டங்கள்




மனிதன் வாழ்நாள் காலத்தில் 4 விதமான உயிர் போகும் கண்டத்தை சந்திக்கிறான். அதை பற்றி திருமூலர் தெள்ள தெளிவாக விளக்குகிறார்:

“அழிகின்ற ஆண்டு அவை
ஐயைஞ்சும் மூன்றும்,
மொழிகின்ற முப்பத்து
மூன்றுஎன்பது ஆகும்
கிழிகின்ற காலஅறு
பத்திரண்டு என்பது
எழுகின்றது ஈரைம்பது
எண்அற்று இருந்தே”

– (திம 742)

பொருள்:

### முதல் கண்டம்: (25–28 வயது வரை)

- இந்த கால கட்டத்தில்தான் மனது அலைபாயும் காலகட்டம்.
- மனிதன் உடம்பை பேண மாட்டான்.
- காம இச்சை மிகுந்திருக்கும். முதியோர்களை மதியா தன்மை இருக்கும்

### இரண்டாம் கண்டம்: 30–33 வயது வரை)

- இந்த கால கட்டத்தில் குடும்ப பாரம் மிகுதியால்
- உடலை பேண மாட்டான்.
- மனம் எப்போதும் கனத்திருக்கும்
- வாழ்க்கை பற்றி பயம் கலந்த சிந்தனை மிகுதிருக்கும்)

### மூன்றாம் கண்டம்: (60–62 வயது வரை)

- இந்த காலகட்டத்தில் மனிதனுக்கு தனது சந்ததியினர் குறித்த கவலைகள் மேலோங்கி இருக்கும்.
- முதுமை குறித்த பயம் இருக்கும்.
- ஆளுமை தன்மை மேலோங்கி இருக்கும்.
- அதனால் ஏற்படும் அழுத்த காரணத்தால் தனது உடலை பேண மாட்டான்

### நான்காம் கண்டம்:

- மேல் கூறிய 3 கண்டங்களை ஒரு மனிதன் கடந்துவிட்டால் தீர்க்க ஆயுள் பெறுவதற்கு சித்தி உண்டு.
- இதற்கு மேல் எல்லை இல்லை.
- இதைத்தான் இன்றைய அறிவியல் அறிஞர்கள் Human Life Cycle Psychology என்கின்றனர்.

# மன குழப்பத்திற்கு யார் காரணம்



ஒருவன் என்னிடம் வந்து "நான் மிகவும் குழப்பத்தில் இருக்கிறேன். நிம்மதியடைய எனக்கு வழி காட்டுங்கள்" என்று எனது கால்களில் விழுந்தான்.

நான், "எனது காலை விடு. உன்னுடைய நிம்மதிக்கும் என்னுடைய காலுக்கும் என்ன சம்மந்தம்? யாரும் கேள்விப்பட்டதே இல்லை. எவ்வளவு நேரம் என் கால்களில் விழுந்து கிடந்தாலும் அங்கே நீ நிம்மதியைக் காணப் போவதில்லை. என்னுடைய கால்கள் உனக்கு என்ன தீங்கு செய்தன? உன்னுடைய இந்த நிலைக்கு என்னுடைய கால்களைக் குற்றம் சொல்லக்கூடாது. நீ குழப்பத்தில் இருப்பதற்கு என்னுடைய கால்கள் காரணமா?" என்றேன்.

அவன் அதிர்ச்சியைடைந்தான்.

"இப்படித்தான் நீங்கள் பேசுவீர்களா? நான் ரிஷிகேஷ் சென்றேன், அங்கும் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை, அரவிந்தர் ஆசிரமத்திற்குச் சென்றேன், அங்கும் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை, அங்கிருந்து திருவண்ணாமலை சென்று ரமணர் ஆசிரமம் சென்றேன், அங்கும் எனக்கு நிம்மதி கிடைக்கவில்லை, எங்கும் எனக்கு நிம்மதியில்லை. எல்லா இடத்திலும் ஆன்மீகம் என்ற பெயரில் போலியாக நடிக்கிறார்கள். ஒருவர் எனக்கு உங்களிடம் செல்லுமாறு கூறினார். எனவே நான் இங்கு வந்தேன்." என்றான்.

நான், "உடனே இங்கிருந்து சென்று விடு. இல்லாவிட்டால் நீ வெளியே சென்று இங்கும் உனக்கு நிம்மதி கிடைக்கவில்லை என்று புரளி பரப்பிக் கொண்டிருப்பாய்.

முக்கியமான விஷயம் என்னவென்றால், முதலில் நீ குழப்பமடைந்தபோது யாருடைய ஆசிரமத்திற்குச் சென்றாய்? குழப்பமடைவதற்கு எந்த குருவின் உதவியை நாடினாய்? நீ குழப்பமடைவதற்கு யார் உனக்கு பயிற்சி கொடுத்தார்கள்? என்னிடம் வந்தாயா? யாரிடம் சென்று "குருவே நான் குழப்பமடைய விரும்புகிறேன். எனக்கு வழி காட்டுங்கள்" என்று கேட்டாய்?

நீயே குழப்பமடைந்து கொண்டாய், அப்போது உனக்கு நீயே போதுமானதாய் இருந்தாய்! இப்போது நீ நிம்மதியடைய விரும்புகிறாய். இங்கே வந்து மற்றவர்களை குற்றம் சொல்கிறாய்.

நீ நிம்மதியடைய வில்லையென்றால் நான் தான் பொறுப்பா? நான் உன்னை குழப்பமடையச் செய்திருந்தால் அப்போது நான் பொறுப்பு. இதற்கு முன் வந்து என்னைக் கேட்டாயா?" என்றேன்.

அவன், "இல்லை, நான் உங்களைக் கேட்கவில்லை" என்றான்.

"பின் யாரிடம் சென்று கேட்டாய்?" என்றேன்.

"இல்லை, நான் யாரிடமும் செல்லவில்லை" என்று பதில் கூறினான்.

"அப்படியென்றால் நீ குழப்பமாக இருப்பதற்கு நீயே காரணம் என்பதை புரிந்துகொள்ள முயற்சி செய். நீ குழப்பமடைய எது காரணம், எப்படி குழப்பமடைந்தாய் என கண்டுபிடிக்க முயற்சி செய். அதைச் செய்வதை நிறுத்து, நீ அமைதியடைவாய்" என்றேன். நிம்மதியடைய வழி ஏதுமில்லை. ஆனால் குழப்பமடைய வழிகள் உண்டு.

குழப்பம் தரக்கூடியதை செய்யாமல் இருந்தால் அவன் நிம்மதியாக இருப்பான்.

விடுதலையடைய வழி கிடையாது. ஆனால் சிக்கிக் கொள்ள ஆயிரம் வழிகள் உண்டு. அடிமையாக வழிமுறைகள் உண்டு. அதில் விழாமல் இருந்தால் அவன் சுதந்திரமாக இருப்பான்.

– ஓஷோ



Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# கணவன் நலம்பெற மனைவி சொல்ல வேண்டிய மந்திரம்



இது ஸத்யவானின் மனைவியான ஸாவித்ரியால், ஸ்ரீ ஸாவித்ரீதேவியை பூஜை செய்து நமஸ்கரித்து பிரார்த்தித்த சுலோகங்களாகும்.

ஓம்கார பூர்விகே தேவி வீணா புஸ்தக தாரிணி!
வேதமாதர் நமஸ்துப்யம் அவைதவ்யம் ப்ரயச்சமே!!
பதிவ்ரதே மஹாபாகே பர்து ச ப்ரியவாதினி!
அவைதவ்யம்ச ஸௌபாக்யம்
தேஹித்வம் மம ஸுவ்ருதே!!
புத்ரான் பௌத்ராம் ச ஸௌக்யம் ச
ஸௌமாங்கல்யம் ச தேஹிமே!!

விளக்கம்

1. தனது பெயருக்கு முன் ஓங்காரத்தை உடையவளும், வீணை, புஸ்தகம், இவைகளை தரித்துக் கொண்டு இருப்பவளும், வேதங்களுக்குத் தாயும், ஆன ஹே ஸாவித்ரீ தேவி (காயத்ரீதேவி) தங்களுக்கு நமஸ்காரம். கணவனை விட்டுப் பிரியாதிருத்தலை (அதாவது தீர்க்க ஸௌமாங்கல்யத்தை) தாங்கள் அளிக்க வேண்டும்.

2. பதிவ்ரதையும், மிகுந்த பாக்யசாலினியும், பர்தாவிற்குப் பிரியமான சொல் சொல்கிறவளும், பக்தர்களை ரக்ஷிப்பதையே வ்ரதமாகக் கொண்டவளும் ஆன ஹே தேவி! என்னை தீர்க்க சுமங்கலியாயும் செய்யவேண்டும். எனக்கு ஸௌபாக்யத்தையும் தாங்கள் அளிக்க வேண்டும்.



www.aanmeegamalar.com